ஓம்

ஆனந்த விகடன்

" இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல் "

மலர் 4.　　சென்னை, 1936ஹு மேமீ 15உ　　இதழ் 4.

உ ள் ளு றை.

18631

விஷயம்.		பக்கம்.
1.	எத்தகைய கல்வி வேண்டும்?	2
2.	அபிஸீனியாவின் வீழ்ச்சி	4
3.	காலச் சக்கரம்	5
4.	சாரதாவின் கல்யாணம்	7
5.	சீமாட்டி கார்த்தியாயினி (தொடர் கதை)	12
6.	'பட்டுவின் பரீக்ஷை'	17
7.	"ருக்ஷா" அல்லது காதல் மணம்	24
8.	மாதர் கடமைக் கும்மி	30
9.	'மஸால்வடைக்காரன்'	33
10.	தேவவிலாசத்தில் கொலை	37
11.	அரசியல் கொடிபூத்த சுகுந்தர மண மலர்கள் (படம்)	41
12.	"ஹரிஜன் தாதா"	44
13.	ஆடல் பாடல்	49

" விகடனி "ல் வரும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்களே, தனிப்பட்டவர்களைக் குறிப்பவை இல்லை.

எத்தகைய கல்வி வேண்டும்?

:(o):

"நமது நாட்டில் இக்காலக் கல்வி முறையில் உள்ள முக்கியமான குறை அது மக்கள் வாழ்க்கைக்குச் சம்பந்தமில்லாமல் இருப்பது தான். கிராமக்கலாசாலைகளில் சுகாதாரம், கிராம பரிபாலனம், விவசாயம், குடிசைத் தொழில்கள், கூட்டுறவு முதலியவைகளைப் போதிப்பது அவசியமாகும். கிராம முன்னேற்றம் அல்லது கிராம புனருத்தாரண விஷயங்கள் எல்லாப் பாடங்களிலும் ஊடுருவிக் கிடக்கவேண்டும். ஆரம்பப் பள்ளிக்கூடம் கிராம வாழ்க்கையின் மூலபலமாய் விளங்க வேண்டும்"—இது தென்னிந்திய ஆசிரியர் சங்க ஆதரவில் இம்மாதம் 7-ம் நாள் சேலத்தில் கூடிய 27-வது மாகாணக் கல்வி மகாநாட்டில் தலைமை வகித்த அறிஞர் திவான்பகதூர் எஸ். இ. ரங்கநாதன் அவர்கள் நிகழ்த்திய முன்னுரையில் ஒரு பகுதியாகும். ஸ்ரீமான் ரங்கநாதன் சிறந்த கல்வி நிபுணர். பலவேறு நாடுகளில் உள்ள ஆரம்ப—மத்திய-உயர்தரக் கல்வி முறைகளையும், தொழிற்கல்வி முறைகளின் சிறப்பியல்புகளையும் நனித்தறிந்தவர். சிதம்பரம் அண்ணாமலைச் சர்வகலாசாலையின் உபதலைவராக விளங்கியவர். எனவே இத்தகைய ஒரு அறிஞர் கூறும் அறிவுரைகளை நேயர்கள் ஊன்றிக் கவனிக்கவேண்டும் என்று "விகடன்" ஆசைப்பட்டு அவைகளை எடுத்துக்காட்ட முன்வந்திருக்கின்றான்.

இக்காலக் கல்விமுறையில் உள்ள ஊழல்களைப்பற்றிப் பேசாத அறிஞர் இல்லை. பயனற்ற உயர்தரக்கல்விக்கு ஏராளமாகச் செலவு செய்கின்றோம். அதன் பயனாய்ச் சர்வகலாசாலைகள் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பட்டதாரிகளை உற்பத்தி செய்து வெளியேற்றிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பட்டதாரிகள் எல்லாரும் வெளியே வந்து சாதிப்பது என்ன! ஒன்றும் இல்லை. சில புலன்களையும் வீடு வாசல்களையும் விற்றுப் பட்டம் பெற்றவர்கள் ஒரு வேலையுமின்றி நிர்க்கதியாய் அலைந்து திரியவேண்டியவர்களாய் இருக்கின்றனர். இவர்கள் நிலைமை இவ்விதம் இருக்க, கோடிக்கணக்கான மக்கள் எழுத்துவாசனை யற்ற மூடப் பூச்சிகளாய்—பாமரர்களாய்க் காலங் கழிக்க வேண்டியவர்களா யிருக்கிறார்கள். ஆங்கில ஆட்சி ஏறக்குறைய இருநூறாண்டுகளாக இங்கே நிலவியிருந்தும் இன்றும் 100-க்கு 90-பேர் கையெழுத்துக்கூடப் போடத் தெரியாத தற்குறிகளாய் இருப்பது வானளாவப் புகழ்ந்து பேசப்படும் ஆங்கில நாகரிக ஆட்சி முறைக்கு அணுவளவும் பெருமை அளிக்காது. பயனற்ற பட்டக்கல்விக்குப் பொருளுதவி எங்கிருந்து கிடைக்கின்றது? தற்குறிப் பாமரமக்களிடமிருந்தே கிடைக்கின்றது. ஒருபக்கத்தில் பயனற்ற பட்டக் கல்வியின் பெருக்கம்; மற்றொரு பக்கத்தில் பாமரத்தனத்தின் பெருக்கம்—இத்தகைய விரோதக்காட்சி இந்நாட்டைத் தவிர வேறு எங்கும் காண முடியாது.

இப்பொழுது அளிக்கப்பட்டு வரும் ஆரம்பக்கல்வியாவது சரியான முறையில் அமைந்திருக்கிறதா என்றால் அதுவும் சூனியம் என்றே சொல்லவேண்டும். உயர்தரக்கல்வி பயின்றவர்கள் உத்தியோகங்களைத் தவிர மற்றத் தொழில் முறைகளை மதிப்பதில்லை. விவசாயம்—வியாபாரம்—கைத்தொழில்கள் எல்லாம் பாமரர்கள் மேற்கொள்ள வேண்டியவை என்ற மனப்பான்மை உயர்தரக்கல்வி பயின்றவர்களின் மனங்களில் ஏறி ஊறிக் கிடக்கின்றது. இதற்குக் கல்வி முறையே காரணம். ஆரம்பக்கல்வி பயின்றவர்களோடும் மேற்சொன்ன தொழில்

முறைகட்குத் தகுதியானவர்களா என்று கவனித்தால் அதுவும் சூனியம். இந்தக் கல்வியும் வாழ்க்கைக்குச் சம்பந்தப் படாததாகவே இருக்கிறது. எனவே இப்பொழுது அளிக்கப்படும் ஆரம்பக் கல்வித் திட்டத்தை அடியோடு மாற்றி அமைக்கவேண்டும். அறிஞர் எஸ். இ. ரங்கநாதன் அவர்கள் குறிப்பிட்டதுபோல் சுகாதாரம், விவசாயம், குடிசைத்தொழில்கள், கூட்டுறவு முதலிய துறைகளில் அறிவும் பயிற்சியும் மாணவர்கள் பெற்று வாழ்க்கை நடத்தும் முறையில் ஆரம்பக் கல்வியைத் திருத்தி அமைக்க வேண்டும். எல்லாரும் கட்டாயமாக ஆரம்பக்கல்வியைக் கற்றே தீரல் வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி ஆரம்பக் கட்டாயக் கல்விமுறையை அமலுக்குக் கொண்டு வரவேண்டும். இது முக்கியமான விஷய மாதலால் முதலில் எடுத்துக் காட்டப்பட்டது. இனி அறிஞர் எஸ். இ. ரங்கநாதன் அவர்கள் பொதுவாகக் கல்விச் சீர்திருத்தத்தைப்பற்றி வெளியிட்டுள்ள கருத்துக்களை ஆராயலாம்.

"நமது கல்விமுறையையே அடியோடுமாற்றி அமைக்கவேண்டும். முதலில் நமது மாகாணத்தில் உள்ள எல்லாக் கலாசாலைகளையும் ஆராயவேண்டும். பிறகு நிபுணர்கமிட்டி நியமித்து எந்தெந்த மாதிரிக் கலாசாலையை எங்கெங்கு அமைத்து, எத்தகைய பாடங்களைப் போதிக்க வேண்டும் என்பதை ஆராயுமாறு செய்தல் வேண்டும். புதிய மாறுதல்களை ஆதரிக்குமாறு ஜனங்களிடையே பிரசாரத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இலக்கியக்கல்வியைத் தவிர மற்ற எவ்வகைக் கல்வி மீதும் ஜனங்களுக்கு வெறுப்பு இருந்து வருகிறது. ஆசிரியர்கள், அரசியல் தலைவர்கள், பத்திரிகைகள் ஆகிய எல்லாரும் சேர்ந்து ஜனங்களின் வெறுப்பைக் களையவேண்டும்" என்று அறிஞர் எஸ். இ. ரங்கநாதன் கூறியது பெரிதும் கவனிக்கத்தக்கதாகும். இதே கருத்தை இதற்கு முன்னரும் சில கல்வி அறிஞர்கள் வெளியிட்டிருக்கின்றனர். பழைய மிடில் ஸ்கூல்களுக்குப் புத்துயிர் அளிக்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். கீழ் வகுப்புக்களில் தொழிற் கல்வியைக் கட்டாயப் பாடம் ஆக்கவேண்டும் என்றும், மேல் வகுப்புக்களில் மாணவர் இஷ்டத்திற்கு அதனை விடவேண்டும் என்றும் அவர் கூறுவது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கதாகும்.

தாய்மொழியில் கல்வி போதிக்க வேண்டும் என்பதை ஸ்ரீமான் எஸ். இ. ரங்கநாதன் பெரிதும் ஆதரிக்கிறார். ஸெகண்டரி கலாசாலைகளில் அளிக்கப்படும் கல்வி திறமையானதாய் இருக்கவேண்டுமானால் பாடங்களைத் தாய்மொழி வாயிலாகவே போதிக்கவும் பரீக்ஷிக்கவும் ஏற்பாடு செய்யவேண்டும் என்கிறார். "பிறமொழியில் பாடங்களைப் போதிப்பதால் மாணவர்கள் மிதமிஞ்சிய சிரமம் அடைகிறார்கள். தத்தளிக்கிறார்கள். அந்நிய மொழி என்ற புகைப்படலம் மாணவர்களின் அறிவுக் கண்களை மறைப்பதால் அவர்கள் கற்கும் பொருள்களின் உண்மைச் சொரூபம் அவர்கட்கு விளங்காமற்போய் விடுகிறது. ஆகையால் ஜீரணித்துக் கொள்ளாத அநேக விஷயங்களை மனங்களில் ஏற்றிக்கொண்டு குழப்பமான கருத்துக்களுடனும் ஆங்கிலத்தின் மூலம் கற்றதால் நன்கு அர்த்தம் செய்து கொள்ளாத கல்வியுடனும் அவர்கள் வீடுகளுக்குச் செல்லுகிறார்கள்" என்று ஸ்ரீரங்கநாதன் கூறுவதற்கு விரிவுரையோ வியாக்கியானமோ அவசியம் இல்லை. நிற்க, அவர் ஆசிரியர்களின் சம்பளங்களைப் பற்றியும், ஆசிரியர் கடமைகளைப் பற்றியும் வெளியிட்டுள்ள கருத்துக்கள் பொன்னேபோல் போற்றத்தக்கவை ஆகும். இக்காலத்தில் ஆரம்பக் கலாசாலை ஆசிரியர்கள் படும்பாடு அளவிட்டுரைக்க முடியாது. "ஆறு அல்லது ஏழு மாதச் சம்பளம் பாக்கி வைக்கப்படுகிறது. சரியான விதிகள் இன்மையால் உத்தியோகம் நிச்சயம் இல்லை. அதனால் அத் தொழிலில் உண்மையான பற்றுக் குறைகிறது. உற்சாகம் குன்றுகிறது. எனவே கல்வி முன்னேற்றம் அடைவதில்லை" என்பது முற்றிலும் உண்மையே. கடைசியாக

ஆசிரியர்களுக்கு அறிஞர் ரங்கநாதம் ஒரு இதோபதேசம் செய்திருப்பது பெரிதும் பாராட்டத்தக்கதாகும். "இந் நாட்டில் அறியாமையும் மூடப் பழக்கங்களும் மாத்திரமின்றிச் சாதி சமய வேற்றுமைகளும் பகைமைகளும் தாண்டவமாடுகின்றன. சமூகக் கொடுமைகள் மலிந்து கிடக்கின்றன. நாடு ஒற்றுமையுடன் முன்னேற வேண்டுமானால் அத் தீமைகளையெல்லாம் ஒழித்தாக வேண்டும். ஆகையால் சுதந்தர எண்ணமும், சகிப்புத் தன்மையும், ஒத்துழைப்பும் உண்டாக்கத்தக்க கல்வியைப் போதிக்க நீங்கள் முயற்சி செய்யுங்கள். அப்போது தான் கல்வியின் லக்ஷியம் நிறைவேறும். அதாவது ஒவ்வொரு மனிதனும் தனக்குரிய கடமையைச் செவ்வையாக ஆற்றிச் சகோதர மனிதனுக்குத் தாராளமாய் அநுதாபம் காட்டி உதவி உலகத்தை மகிழ்ச்சி மயமாக்குபவன் ஆவான்."

அபிஸீனியாவின் வீழ்ச்சி

—:(0):—

ஏழு மாதங்கள் இடையறாமல் நடத்திய கடும்போருக்குப் பிறகு இத்தாலி அபிஸீனியாவைக் கைப்பற்றிவிட்டது. இத்தாலி சர்வாதிகாரியான முஸோலினி "நாங்கள் அமைதியை- சாந்தியை நிலைநாட்டி விட்டோம்' என்று வெற்றிக் களிப்புடன் வீரம்பேசி மகிழ்கின்றார். இயற்கையிலேயே போருணர்ச்சியும் ஆண்மையும் வலிமையும் படைத்த அபிஸீனியர் தோற்றுவிட்டனர். அபிஸீனியச் சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள பாலஸ்தீனத்திலுள்ள ஹைபா நகரைப் புகலிடமாகக் கொண்டனர். அபிஸீனியாவின் தலைநகரான அடிஸ் அபாபாவில் கொள்ளையும் கொலைகளும் நிகழ்ந்த போதிலும் இத்தாலியரின் ஆதிக்கத்திற்கு வந்து விட்டது என்பதில் ஐயம் இல்லை. இனி அபிஸீனியா இத்தாலியருக்கே உரிமை. இத்தாலியானது தனது பேராசையை நிறைவேற்றிக் கொண்டது. உலகத்தில் இருக்கும் நாகரிக வல்லரசுகள் கண்களைத் திறந்துகொண்டு இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கும் போதே இத்தாலி அபிஸீனியாவை விழுங்கிமென்று தின்று ஜீரணமாக்கி விட்டது. உலக சமாதானம் எங்கே? உலக சமாதானத்தை நிலை நாட்ட வந்த சர்வதேச சங்கம் எங்கே? சர்வதேச சங்கம் இத்தாலியின் மீது ஏற்படுத்திய நிர்ப்பந்தங்கள் எங்கே? இத்தாலி எல்லாவற்றையும் ஆடிக் காற்றிற் பஞ்சு போல் ஆக்கி விட்டது. இத்தாலியின் ஏகாதிபத்தியப் பேராசையானது யுத்த தருமங்களையெல்லாம் அலக்ஷியம் செய்து விட்டது. பல ஆண்டுகள் தயாரித்து வைக்கட்டிருந்த ஆகாய விமானங்கள் குண்டுமாரி பொழிந்தன! நிர்க்கதியான மக்கள் மீது விஷப் புகை மேகங்கள் கவிழ்ந்தன! அக்கினித் திராவக வெள்ளம் பாய்ந்தது! ஆஸ்பத்திரிகள் நாசம் ஆயின. குழந்தைகள் வயோதிகர்கள் எல்லாரும் மாண்டு மடிந்தனர். இதுவா தரும யுத்தம்? இத்தாலியின் அக்கிரமச் செய்கையை உலகம் வெறுக்கிறது. கண்டிக்கிறது. "அபிஸீனியர் காட்டுமிராண்டிகள். நாங்கள் அவர்களைப் பழக்கி நாகரிகப்படுத்தப் போகிறோம்" என்று முஸோலினி கூறினார். அவர் நாகரிகப்படுத்தும் யோக்கியதையை இத்தாலியர் மேற்கொண்ட போர் முறைகள் முன்னாடியே தெரிவித்து விட்டன. இத்தாலிய-அபிஸீனிய யுத்தம் சர்வதேச சங்கத்தின் போலித்தன்மையை—ஆண்மையற்ற தன்மையை வெட்டவெளிச்சமாக்கிவிட்டது. இனிமேல் அச்சங்கத்திற்கு எத்தகைய மரியாதை இருக்கும் என்பதை விரிக்கவும் வேண்டுமோ? உலகத்தில் நீதி என்பது வல்லான் வகுத்த வாய்க்காலாகிவிட்டது. எளியாரை வலியார் வாட்டினால் வலியாரைத் தெய்வம் வாட்டுவது என்று?

காலச் சக்கரம்

அரசியலில் இந்தியர் நிலை

பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவில் நிலைநிறுத்தி அதிகாரஞ் செலுத்தி வரும் இரும்புத்தூண்கள், அனைவரும் ஆங்கிலேயர்களே யாவர். சர்க்கார் நிர்வாக சபைகளிலும், மற்றும் பொறுப்புள்ள பதவிகளிலும் ஆங்கிலேயர்களே சமீப காலம் வரை அங்கம் வகித்து வந்தனர். இந்தியர்களில் பலர் அரசியல் நிபுணத்வமும், நிர்வாகத் திறமையும் வாய்ந்தவர்களா யிருந்தும், பிரிட்டிஷ் இந்திய சர்க்கார், இந்தியர்கள் மீது அவநம்பிக்கை கொண்டோ என்னவோ, அவர்களுக்குப் பெரும் பதவிகள் எதையும் வழங்க மன மிசையவில்லை. இந்தியர்கள் இன்னும் பக்குவ மடையவில்லை; அவர்களுக்குப் பொறுப்புணர்ச்சி கிடையாது என்றெல்லாம் ஏதேதோ சாக்கு போக்கு கூறிக் காலங் கடத்தி வந்தனர். காலச்சக்கரம் உருண்டோடும் வேகத்தில் இந்நிலைமை எவ்வளவுநாள் நீடித்திருக்க முடியும்? காங்கிரஸ் மகா சபை செய்து வந்த பெருங்கிளர்ச்சி பிரிட்டிஷ் இந்திய சர்க்காரை அசைத்து விட்டது. அதன் பயனாக, அவர்கள் மெல்ல பொறுப்புள்ள பதவிகளில் இந்தியர்களை நியமிக்க முன் வந்தனர்.

* * *

ஸர். கே. வி. ரெட்டி
ஆக்டிங் கவர்னர்

முதன் முதலாக, லார்டு ஸின் ஹாவுக்கு வடநாட்டில் ஒரு மாகாணத்தில் கவர்னர் பதவி வழங்கப்பட்டது. அதன் பின்னர், ஸ்ரீமான் தாம்பே போன்றவர்களுக்குப் பெரும் பதவிகள் அளிக்கப்பட்டன. சமீபத்தில் மத்திய மாகாணத்தில், காங்கிரஸ் வாதியான—கதருடை தரித்த ஸ்ரீ ராகவேந்திர ராவுக்குக் கவர்னர் பதவி தந்தனர். நமது சென்னை மாகாணத்திலும் தற்சமயம் ஸர். கூர்மா வெங்கட ரெட்டி நாயுடு ஆக்டிங் கவர்னராக நியமிக்கப் பட்டிருக்கிறார். லார்டு எர்ஸ்கின் ரஜா எடுத்துக் கொண்டு இங்கிலாந்து செல்வதால், அந்நான்கு மாதங்கள் வரை ஸர். கே. வி. ரெட்டி கவர்னராக விருந்து காரியங்களைக் கவனித்து வருவார். இதற்கு முன்னர் ஸர். ஸ்டான்லி கவர்னரா யிருந்த காலத்தில் ஸர். முகம்மது உஸ்மானுக்கு இவ்வாறே ஆக்டிங் கவர்னர் பதவி யளிக்கப்பட்டது நண்பர்களுக்கு நினைவிருக்கும். ஆகவே, நம் மாகாணத்தில் இதுவரை இரு இந்தியர்—அதிலும் பிராம்மணரல்லாதார்—கவர்னர் ஆனதைப் பற்றி "விகடன்" பெருமிதங் கொள்ளுகிறான். இந்தியர் ஒரு மாகாணத்திற்கு அதிபதியாவதென்றால், அது, பிரிட்டிஷ் ஆட்சியில் அவ்வளவு எளிதான காரியமல்ல. ஆகவே அவ் வகையில், ஸர். கே. வி. ரெட்டி கவர்னரானதைக் குறித்து, "விகடன்" அவரை வாழ்த்துகிறான். நம்மில் இரண்டொருவர் கவர்னராகவும், நிர்வாக சபையங்கத்தினராகவும் நியமிக்கப்பட்டு விடுவதாலேயே, இந்தியாவுக்குச் சுயராஜ்யம் வந்துவிட்டதாக "விகடன்" சிறிதும் எண்ணவில்லை. மிகத் தாழ்மையாகக் கருதப்பட்டு வந்த நம் இந்தியர்களில் ஒரு சிலர்க்காயினும் இவ்வித கௌரவங்கள் அளிக்கப்படுகின்றனவே என்ற அளவில் திருப்தி யடைவதைத் தவிர, வேறொன்றுமில்லை. இச்சமயத்தில் ஸர். கே. வி. ரெட்டிக்கு 'விகடன்' ஒரு வார்த்தைகூறவிரும்புகிறான். அவர் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களில் ஒருவரா யிருந்து, அந்த ஹோதாவிலேயே இப்போது ஆக்டிங் கவர்னராய் வந்திருக்கிறார்; ஆயினும், அவரது ஆட்சியில் பொதுநோக்கு இருக்கவேண்டும்; கட்சிக் கொள்கைகளை நிலைநாட்ட சிறிதும் இடங்கொடுக்கக் கூடாது. அப்போது தான் அவர் நல்ல பெயர் பெறமுடியும் என்று கூற விரும்புகிறான்.

* * *

வேலூரில் கபட நாடகம்

நெற்கதிரில் பதரும் இருப்பதுபோல், காங்கிரஸ் காரர்களிலும் சில புல்லுருவிகள் இருக்கிறார்களென்பதற்கு உதா

ணம் வேண்டுமானுல், சமீபத்தில் வேலூர் ஜில்லா போர்டு தலைவர் தேர்தலில் நடந்த துரோகச் செயலொன்றே அமையும். வேலூர் ஜில்லாபோர்டு தேர்தலில் மொத்தம் 34 ஸ்தானங்களுக்கு 26 ஸ்தானங்கள் காங்கிரஸ் காரர்களுக்குக் கிடைத்து விட்டதால், அத் தேர்தலில், இதற்கு முன் நடந்த மற்ற ஜில்லாபோர்டு தேர்தல்களின் முடிவைப் போலவே காங்கிரஸுக்கு வெற்றி கிடைத்திருக்கிறது என முன் இதழில் 'விகடன்' எழுதியிருந்தது வாசகர்களுக்கு ஞாபக மிருக்கும். அப்படியிருந்தும், தலைவர் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர் தோல்வி யுற்றுர் என்றுல், ஆச்சரியமும், ஏமாற்றமும் ஒருங்கே எழாமலிராது. காங்கிரஸ் அபேட்சகர் திரு. கண்ணப்ப முதலியாருக்கு 15 ஓட்டுகளும், அவருக்குப் போட்டியாக நின்ற ஜனுப் அப்தல் ஹகீம் சாயபுக்கு 17 ஓட்டுகளும் கிடைத்தன. இதிலிருந்து பார்த்தால், காங்கிரஸ் மெம்பர்களில் 10-பேர் கட்சித் துரோகம் செய்திருக்கிருர்களென்பது நன்கு புலப்படும்.

* * *

துரோகத்துக்குப் பிராய சித்தம்

இவ்விதம், காங்கிரஸ் கட்டளையையும், கட்டுப்பாட்டையும் மீறித் துரோகஞ் செய்த துரோகிகள் யார்? அவர்களை எவ்வாறு கண்டுபிடிக்க முடியும்? அது எளிதான காரியமா? தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டியார் இத்துரோகிகளைக் கண்டுபிடிக்க முயற்சி செய்தனர். பின்னர், அது அசாத்தியமானது என்று தெரிந்ததும், வேலூர் ஜில்லாபோர்டு காங்கிரஸ் மெம்பர்களையெல்லாம் வரவழைத்து அவர்களோடு கலந்தாலோசித்து ஒருவித முடிவுக்கு வந்தனர். அதாவது, வேலூர் ஜில்லாபோர்டு தலைவர் தேர்தலின் முடிவு, காங்கிரஸுக்கு கௌரவக் குறைவை யேற்படுத்தி விட்டதால், வேறு நிவர்த்தியில்லாத நிலைமையில் காங்கிரஸ் மெம்பர்களனைவரும் உடனே ராஜிநாமா செய்துவிட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானத்திற்குக் கீழ்ப்படிந்து இதுவரை 21 காங்கிரஸ்காரர்கள் தங்கள் மெம்பர் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார்கள். மற்ற காங்கிரஸ் மெம்பர்களும் குறிப்பிட்ட தேதிக்குள் ராஜிநாமா செய்து விடலாம். ஆனல் இதன் விளைவு எவ்வாறுகும் என்பது போகப் போகத்தான் தெரியும். வேலூர் ஜில்லா போர்டு தலைவர் தேர்தல் சம்பவம், இனிவரும் தேர்தல்களுக்குப் பெரிய படிப்பினையாக இருக்கும் என்பது நிச்சயம்.

* * *

டாக்டர் அன்சாரியின் பிரிவு

"உறங்குவது போலும் சாக்காடு, உறங்கி விழிப்பது போலும் பிறப்பு"

என்ற தமிழ்மறைமொழிக்கு உதாரணமாக அமைந்தது டாக்டர் அன்சாரியின் மறைவு! சென்ற 9-ந்தேதி யன்றிரவு வரை டாக்டர் அன்சாரி மரணமடைவார் என யாராகிலும் நினைத்திருப்பார்களா? அல்லது டாக்டர் அன்சாரிதான் நினைத்திருப்பாரா? டோராடூனுக்குப் போய் விட்டு டில்லிக்குத் திரும்ப ரயிலில் பிரயாணஞ் செய்துகொண்டிருந்த டாக்டர் அன்சாரி திடீரென மார்புவலி கண்டு நள்ளிரவில் இறந்தாரென்றுல், அந் நிலைமையை என்னென்று விவரிப்பது! அவர் உயிர் விடு முன், "நான் உயிரோடிருக்கவே விரும்புகிறேன். ஆனல் மரணம் என்னை அழைக்கிறது" என்று கூறிய உருக்கமான மொழியிலிருந்து, அவர் தாய் நாட்டினிடம் எவ்வளவு தூரம் பற்று வைத்திருக்கிருர் என்பது புலப்படும். அவர் ஒரு பெரிய உத்தம தேசபக்தர்; உண்மைத் தியாகி. இந்து முஸ்லிம் என்ற வேற்றுமை யுணர்ச்சியில்லாத உதாரகுண புருஷர். ஒற்றுமைக்காக அநவரதமும் பாடு பட்டவர். அத்தகைய பெரியார் பிரிவை எவ்வாறு சகிப்பதென விகடனுக்குத் தோன்றவில்லை. தாய் நாட்டுச் சேவைக்கே தம் உடல் பொருளாவியை அர்ப்பணஞ் செய்த அம் மகானது குடும்பத்துக்கு எவரால் தேர்தல் கூற முடியும்? கடவுள் தான் சாந்தியை அளிக்க வேண்டும்.

சாரதாவின் கல்யாணம்

—:(0):—

('சீமா.')

கதா பாத்திரங்கள்:—

சுந்தரமய்யர்:—ஓர் பிரபு.
சாந்தநாயகி:—பிரபுவின் மனைவி.
சாரதா:—பிரபுவின் பெண்.
ராமநாதன்:—ஒரு ஏழைக் குமாஸ்தா.
பஞ்சு சாஸ்திரி:—ஒரு ஜோஸ்யர்.
குப்பன்:—வேலைக்காரன்.

காட்சி 1.

காலம்:—காலை நேரம்.

இடம்:—ஓர் தோட்டத்தின் அழகிய பாகம்.

ஒரு மேஜையைச் சுற்றி நாலைந்து பேர்கள் உட்கார்ந்து சீட்டாடிக் கொண்டிருக்கிறார்கள். அதில் சுந்தரமய்யரும் ஒருவர். மேஜையின்மேல் பிராந்தி புட்டி ஒன்றும் அதன் பக்கத்தில் ஓர் 'கிளாஸு'ம் நிற்கிறது. (சாந்தநாயகியின் தோற்றம்.)

சா. நா:—"ஏன்னா, என்ன சொன்னாலும் காதிலேயே போட்டுக்கொள்ள மாட்டேங்கறயளே? தினம் பொழுதுவிடிஞ்சா பொழுதுபோனா இதே தொழிலாப் போயிடுத்தே உங்களுக்கு?"

சுந்தரமய்யர். "ஆ, என்ன?" ('ஒயினை'க் கொஞ்சம் சாப்பிடுகிறார்; மற்றெல்லாரும் போய்விடுகின்றனர்.)

சா. நா:—"ஆ, வா? தடியாட்டமா ஒரு பெண்ணிருக்கேடென்ற கவலை

கொஞ்சங்கூட கிடையாது; நாலு பேர் பார்த்தா நாளேக்குச் சிரிக்கமாட்டாளா?"

சுந்தரம்:—"அதற்கு என்னே யென்ன பண்ணச் சொல்லுகிருய்?"

சா. நா:—"யாராவது ஜோஸ்யனேக் கூப்பிட்டு அந்தப் பெண் ஜாதகத்தைப் பார்க்கச் சொல்லுங்கள்."

சுந்தரமய்யர்:—"சரி; அப்படியே ஆகட்டும். யாரடாது, குப்பா, இங்கே வா?"

குப்பன் தோன்றுகிருன்.

சுந்தரம்:—"அந்தப் பஞ்சு சாஸ்திரியைத் தெரியுமோ இல்லேயோ உனக்கு?"

குப்பன்:—பஞ்சுக் கடை இன்றைக்குப் பூட்டிருப்பான், சாமி."

சுந்தரம்:—"மடையா, ஜோஸ்யர் பஞ்சுவைத் தெரியுமாடா? அவரைக் கூப்பிட்டுக் கொண்டு வா, போ.

திரை விழுகிறது.

காட்சி 2.

இடம்:— சுந்தரமய்யர் பங்களாவின் ஓர் அறை.

சுந்தரமய்யர்:-"ஜோஸ்யரே, என்ன விசேஷம்?"

பஞ்சுவய்யர்: எல்லாம் தங்கள் கிருபைக்கு ஒன்னும் குறைவில்லே;

சுந்தரம்:—"அதெல்லாம் சரி; நம் சாரதாவுக்குக் கல்யாணம் பண்ணலுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

பஞ்சு:—அதற்கென்ன, எல்லாம் கடவுள் புண்யத்திலே திவ்யமா நடக்கும்."

சுந்தரம்:—இந்தாரும்; இந்த ஜாதகத்தைப் பாரும்.

பஞ்சு.—"எல்லாம் சுத்தமாய்த்தான் இருக்கு. ஆனல் செவ்வாய் தோஷம் ரொம்பவும் பாதிக்கிறதே!"

சுந்தரம்:-அப்படியானுல் கல்யாணம் ஏதாவது தடைப்படுமோ?"

பஞ்சு:—"அதெல்லாம் நிற்காது; கவலேயே இல்லே; நாலு பிராமணனுக்குத்

தட்சிணை கொடுத்துச் சாந்தி செய்து விட்டால் எல்லாம் சரியாய்ப் போய்விடும். சரி; நான் போய்வருகிறேன் (மனசுக்குள்) எந்தப் பயல் இந்தப் பெண்ணை அடித்துக் கொண்டு போகப் போகிறானோ?"
(போகிறார்; திரை.)

காட்சி 3.

இடம்:—சுந்தரமய்யர் வீட்டின் மற்றொரு அறை.

சாரதா, அவளுடைய அம்மா, அப்பா எல்லாரும் மேஜையைச் சுற்றி வட்டமாக உட்கார்ந்திருக்கின்றனர்.

சுந்தரம்:—"சாரதா, உன்னை நம்ம சீனுவுக்கு (சாரதாவின் அத்தானுக்கு) நிச்சயம் பண்ணிருக்கேன்."

சாரதா:-(தலையைக் குனிந்துகொண்டே) "நான் அவனைப் பண்ணிக்கொள்ள மாட்டேன்."

சாந்தநாயகி:-"பின்னே யாரை?"

சாரதா:—"நமது பக்கத்து வீட்டு ராமநாதனை."

சுந்தரம்:—"நன்றாயிருக்கிறது; ராமநாதனுக்கு என்ன ஸொத்தா? மண்ணாங்கட்டியா? அவனைப் போய்ப் பண்ணிக் கொள்ளுகிறேன் என்கின்றாயே?"

சாந்தநாயகி:-"பேஷ்! ரொம்பத் தாமான பேச்சு? ராமநாதனுக்கு அந்தக் குமாஸ்தா உத்யோகம்தான் கதி; வேறு என்ன? ஏழையைப் போய்க் கல்யாணம் செய்துகொள்ளுகிறேன் என்கிறாயே?"

சாரதா:—"எனக்கு அவன்மேல் இஷ்டம்; நான் வேறு ஒருவனையும் மணம் செய்து கொள்ளமாட்டேன்.

சுந்தரமய்யர்:-"உன் யோக்கியதை யென்ன? அவன் அந்தக் காலிப் பயல் யோக்கியதை யென்ன? கொஞ்சங் கூட யோஜனை யில்லையே!"

சாரதா:—"மனஸுக்குப் பிடித்தவன் பெரிசா? பணமா?"

சுந்தரமய்யர்:—"அப்புறம் என் முகத்தில் முழிக்க உனக்கு யோக்

கியதை கிடையாது; அவ்வளவுதான். (கோபத்துடன் எழுந்து சென்றுவிடுகிறார்.)

சாந்தநாயகி:— "சாரதா, வீணே உங்க அப்பாவின் கோபத்தைக் கிளப்பாதே; அவர் சொல்லுவதைக் கேள்.

சாரதா:—(மௌனம்.) திரை.

காட்சி 4

இடம்:— தோட்டத்தின் ஓர் பாகம்.

காலம்:— மாலை மணி 7.

சாரதா:— "ராமநாதா, நீ இன்று இரவு 12 மணிக்குச் சந்திக்கவும். நான் மணி 12க்கு கதவைத் திறக்கிறேன்; தெரிந்ததா ?"

ராமநாதன்:— "சரி; அப்படியே ஆகட்டும் (முத்தம் கொடுக்கிறான்.)

காட்சி 5.

காலம்:— நடு நிசி:

ராமநாதன் அடிமேல் அடியெடுத்து வைத்து நடந்து வருகிறான். பக்கத்தறையில் தூக்கமில்லாமல் படுக்கையில் சுந்தரமய்யர் புரண்டுகொண் டிருக்கிறார். பக்கத்தறையில் காலடிச் சப்தத்தைக்கேட்டு 'ஸ்விச்சை'ப் போடுகிறார். மேஜையைத் திறந்து கைத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு பக்கத்தறைக்கு ஓடுகிறார். ராமநாதன் பயத்தால் முழிக்கிறான்)

சுந்தரமய்யர்:— (துப்பாக்கியை ராமநாதனின் கழுத்துக்கெதிரே பிடித்துக் கொண்டு) "நீ, யார்? இங்கு என்ன வேலையுனக்கு?"

'சப்தத்தைக் கேட்டுச் சாரதா ஓடி வருகிறாள்.)

சாரதா:— (ராமநாதனுக்கும் துப்பாக்கிக்கும் மத்தியில் நின்றுகொண்டு) அப்பா என்னைச் சுட்டுவிடு; அவனைத் தொடாதே!"

சுந்தரம்:— "என்னடி, இது?" (சாந்தநாயகி வருகிறாள்.)

சாந்தநாயகி:— "என்ன அலங்கோல மிது?"

சாரதா:—"நீ என்னை ராமநாதனுக்கு கல்யாணம் செய்து கொடுக்க மறுத்ததனால், இன்று இரவே நாங்களிருவரும் ஓடிவிடத் தீர்மானித்து இந்த ஏற்பாடு.

சாந்தநாயகி:—"நன்னா யிருக்கடி, நீ செய்யறது? இது என்ன, தேவடியாள் வீடு என்று நினைச்சயா? ஏண்டா, ராமநாதா, தடிபோல வயசாகிறதே! நானு பிள்ளைப்பெற வயஸாகிறதே? இதென்ன, தாலி விடென்று நினைத்தா இராத்திரி 12 மணிக்கு வந்தாய்?

ராமநாதன்:—"இன்னம் எனக்குக் கல்யாணமே ஆகவில்லையே? எப்படிப் பிள்ளை..........."

சுந்தரமய்யர்:—"பேசாதே இருடா, ராஸ்கல்!"

ராமநாதன்:—"எங்கள் வீட்டுப் பெண் பொல்லாது; உங்கள் வீட்டுப் பையனை யடக்கு' என்று பேசுகிறீர்களே!"

சாரதா:—"நீ பேசாமலிரு, ராமநாதா?"

சுந்தரமய்யர் (பிஸ்டலை வீசி யெறிந்து விட்டு.) "சாரதா, உன்னை வெளியே தள்ளி கதவைச் சாத்திவிட்டால் பிறகு திறப்பேன் என்று மட்டும் நினையாதே! வீணே கெட்டுப் போகாதே, வேண்டாம், வேண்டாம்............

சாந்தநாயகி:—"போதும்; போதும், ராமா, எத்தனைநாள் தவம் கிடந்து இந்தப் பெண்ணைப் பெற்றேனே? (அப்படியே நாற்காலியில் வீழ்கிறாள்.)

திரை விழுகிறது.

காட்சி 5.

இடம்:—வேற்றூரில் ஓர் பங்களா.

சாரதாவும் ராமநாதனும் உட்கார்ந்து சம்பாஷித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ராமநாதன்:—"கண்ணே, சாரதா, எத்தனைநாள் இப்படிக் கஷ்டப்படுவது? பணம் எல்லாம் கரைந்து விட்டதே!

சாரதா:—"வருந்தாதீர்கள்; எல்லாம் பகவான் இருக்கிறான்."

ராமநாதன்:— (மேஜைமீதிருந்த தினசரியைக் கையிலெடுத்து) "இன்றைய பத்திரிகையா இது? அதற்குள் வந்து விட்டதே!"

சாரதா:—"ஆமாம்; தபால்காரன் காலையில் கொண்டு தந்தான்."

ராமநாதன்:—(பக்கங்களைப் புரட்டிக் கொண்டே போகிறான் ஏதோ சில வரிகளை நடுக்கத்துடன் படிக்கிறான்.)

"படு கொலை!

சுந்தரமய்யரும் அவர் மனைவியும் ஒரே படுக்கையில் கொலையுண்டு கிடந்தனர்; விவரம் அடுத்த இதழ் பார்க்கவும்."

(ராமநாதனும் சாரதாவும் மறுநாளே கிளம்புகின்றனர்; எல்லாவற்றையும் போட்டது, போட்டபடியே விட்டுவிட்டு.)

காட்சி 6.

இடம்:—சுந்தரமய்யர் பங்களா.

சாரதா:—("அம்மா, அப்பா" என்று கத்திக்கொண்டே ஓடுகிறாள்.)

சாந்தநாயகி ஓடி வந்து சாரதாவை அணைத்துக் கொள்ளுகிறாள். சுந்தரமய்யர் தோற்றம்.

சாரதா:—அப்பா, அப்பா (அணைத்துக் கொள்ளுகிறாள்) (ராமநாதனைத் தழுவிக்கொண்டே, சுந்தரமய்யர்) "அப்பா, எங்களை மன்னித்து விடு."

எல்லோரும் ஆனந்த பாஷ்பம் சொரிகின்றனர்;

ராமநாதன்:-"என்ன இப்படித் திடுக்கிடச் செய்தீர்களே!"

சுந்தரமய்யர்:—"எல்லாம் இப்படிச் சந்தோஷமா, இருக்கத்தான்."

4-வது ஆண்டு ஆரம்பப் பரிசு.

4-6-36-தேதிக்குள் வந்து சேரும் எல்லா சரியான விடைகளுக்கும் 10 ரூபாய் விலையுள்ள "தமிழ்மொழி யகராதி" ஒவ்வொன்று அனுப்பப்படும்.

8000 ரூ. எட்டாயிரம் ரூபாய்கள் ரூ. 8000.

1-ம் பரிசு ரூ. 5000. **போட்டிப் பரிசு.** 2-ம் பரிசு ரூ. 3000.

போட்டி எண் 3/34.	
1. மனிதர்	மா — — ர்
2. ஓர் தமிழ் வருடம்	— பவ
3. அன்பு	— — ம்
4. காகம்	மௌ — லி
5. தாய்	— —
6. முனி	— ருடி
7. ஓர் காட்டு மிருகம்	— — — ம்

பக்கத்து கட்டத்தில்—இம்மாதிரி கோடிட்டிருக்கும் இடங்களில் விடுபட்டிருக்கும் எழுத்துக்களைப் பூர்த்திசெய்து ஒரு விடைக்குப் பிரவேசக் கட்டணம் 8-அணவுடன் 13-6-36உக்குள் வந்துசேரும்படி அனுப்பவேண்டும். (7வார்த்தைகளும் சேர்ந்ததே ஒரு விடை) ரூ. 4-க்கு எத்தனை விடைகளேனும் அனுப்பலாம். காரியாலயத்தில் சீல்செய்து வைத்திருக்கும் விடைக்குச் சரியாய் அனுப்புவோருக்கு முதல் பரிசும், குறைந்த தவறுள்ள விடைகளுக்கு முறையே மற்ற பரிசுகளும வழங்கப்படும். சகல விஷயங்களிலும் மானேஜரின் தீர்ப்பே முடிவானது. ரூ. 4-க்கு விடை அனுப்புவோர் கண்டுபிடித்த வார்த்தைகளை வரிசைக் கிரமமாய் எழுதி அனுப்பலாம். தனித்தனி கூபன் அவசியமில்லை. விடை அனுப்புவோர் அனுப்பும் விடைக்கு சரியான நகல் வைத்துக்கொள்ளவும். சந்தேகக் கடிதமெழுதுவோர் பதிலுக்கு ஸ்டாம்பு அனுப்புதல் வேண்டும். பரிசு கிடைக்காதவர்களுக்கெல்லாம் நான்காவது வருட ஆரம்ப தினத்தை முன்னிட்டு 4-அணு விலையுள்ள "குடும்ப வைத்திய பொக்கிஷம்" என்னும் புத்தகம் ஒவ்வொன்று இலவசமாய் அனுப்பிவைக்கப்படும். பரிசு முடிவும், சரியான விடையும் 18-6-36ச் தேதி தண்டு பிரசுர மூலம் எல்லோருக்கும் அறிவிக்கப்படும்.

மானேஜர்:-எஸ். நடேசன், தமிழ் வார்த்தை நிலையம், பெரம்பூர் பேரக்ஸ், சென்னை.

சீமாட்டி கார்த்தியாயினி!

"ஜீவா"

தன் ஆத்திரமெல்லாம் அடங்கும் வரை வாய்விட்டுக் கதறியழுது அலுத்துப்போன தேவகி தனக்குள்ளாகவே மனங் குமுறலானாள். சிறிது நேரம் இதே நிலைமையிலிருந்தாள். பின்னர், என்ன நினைத்தாளோ! திடீரென முகத்தை நிமிர்த்து பார்த்தாள். அவளது வாய் ஏதோ பிதற்றத் தொடங்கியது:—

"நான் ஏன் வீணாக அழுது மனங்குமுறிக் கொண்டிருக்கவேண்டும்? என் அழுகை யாருக்குக் கேட்கும்? என் மனநிலைமை எவருக்குத் தெரியும்?—ஆண்கள்—இந்த ஆடவர்களே மிகவுங் கன்னெஞ்சர்கள்; நயவஞ்சகர்கள்; சுயநலங் கொண்டவர்கள் என்பதை இப்போதுதான் அறிந்தேன். அதிலும் சிவசைலத்தைப் போன்ற ஈரமற்ற நெஞ்சும், இரும்பு இருதயமும் உடையவர்களை உலகிலேயே காணமுடியாது என நினைக்கிறேன். நான் அவனை எவ்வளவு அதிகமாக நேசித்து வந்தேன்—வருகிறேன் என்பது அவனுக்குத் தெரியாதா? எத்தனை நாள் அவன் வரவை ஆவலோடு எதிர்பார்த்து காத்திருந்திருக்கிறேன்? வழக்கம்போல் வராது ஒரு நாள் தவறிவிட்டாலும், அவனுக்கு என்ன நேர்ந்ததோ? ஏது ஏற்பட்டதோ என்றெல்லாம் ஆகுலித்து எவ்விதமாகத் துடிதுடித்துக் கொண்டிருந்திருக்கிறேன்? அவனோடு உரையாடிக் கொண்டிருப்பதையே பெரும் பேறாகவும் பேரானந்தமாகவும் நினைத்து எத்தனை நாள் நேரம் போவதுந் தெரியாது மணிக் கணக்காகப் பேசிக் கொண்டிருந்திருக்கிறேன்! அவற்றைக் கணக்கிட முடியுமா? இவை போதாவா ஒரு மங்கை வாலிபனொருவனைக் காதலிக்கிறாள் எனத் தெரிந்து கொள்வதற்கு? 'நான் உன்னைக் காதலிக்கிறேன்' என வாய்விட்டுச் சொன்னால்தான் தெரியுமா? பெருங்குடிப் பிறப்பும், நாணமுமுடைய ஒரு பெண் இவ்வாறு வாய்விட்டுக் கூறுவாளா?—உம். எல்லாம் என்னுடைய தவறேயாகும். நானாகவே வானளாவ மனக்கோட்டை கட்டிக்கொண்டு, அது நிலைத்து நிற்காது இடிந்து விழுந்து விட்டதே என்று அழுதால் அதனால் என்ன பயன்?—இப்போது சிந்தித்துப் பார்த்தால், நான் இத்தனை நாளாக சிவசைலத்தோடு அளவளாவிப் பேசி அந்நியோந்நியமாகப் பழகி வந்தும், அவன் என்னிடம் சிநேக பாவனையிலேயே பழகி வந்திருக்கிறானேயொழிய, அவன் என்னைக் காதலிப்பதாக ஒரு வார்த்தை—அதற்கு எவ்வளவோ சந்தர்ப்பமிருந்தும் கூட—கூறவேயில்லையே! அவன் என்னிடங் காதல் கொண்டிருப்பதாகப் பேச்சிலோ, செயலிலோ குறிப்பாகவும் தெரிவித்ததாக ஞாபகமில்லையே! அவ்விதமிருக்க, நானாகவே மனப்பால் குடித்துக் கொண்டிருந்தால் அதற்கு அவனா பொறுப்பாளி?

அவன் மிகவும் எச்சரிக்கை யாகத்தான் நடந்து வந்திருக்கிறான். நான்தான் இலவு காத்த கிளிபோல் ஏமாந்தேன. பழுக்கும் பழுக்கும் என்று பாதுகாத்திருந்து, இலவம் பஞ்சுக்காய் கடைசியாக வெடித்து விட்டதைக் கண்டு திடுக்கிட்டு பறந்தோடிய பைங்கிளிக்கும் பகுத்தறிவுடைய எனக்கும் என்ன வித்தியாச மிருக்கிறது? அக்கிளி ஏமாந்து ஏங்கியதைப் போல்தான் நானும் மனமேங்கித் தவிக்கிறேன். பெண்கள் பேதையர் என்று கூறுகிறார்களே! அது என் விஷயத்தில் மெய்யாய்விட்டது. ஏதோ இரண்டொரு எழுத்து வாசிக்கத் தெரிந்து ஆங்கிலக் கல்வியும் உலக அறிவும் பெற்ற நானே இவ்வளவு பேதைமையாய் இருப்பேனானால், படிப்பு வாசனையற்ற—அதிலும் பட்டிக் காட்டுப் பெண்கள் எவ்வளவு பேதைமை கொண்டவர்களாய் இருப்பார்கள்?—ஆ! அவன்—அந்த சிவசைலம்—இன்று என் சகோதரியைப் பார்த்த பிறகு—அவளுடைய சிநேகம் பெற்ற பிறகு—என்னிடம் எவ்வளவு அலட்சியமாய் நடந்துகொண்டான்? நான் அவன் ஒரு வாரமாக வாராதிருந்தமை பற்றிப் பரிவோடு பதைத்துக் காரணங் கேட்டும், அவன் அதற்குச் சரியாகப் பதிலே சொல்லாது ஏதோ கூறி என்னைத் தட்டிக் கழிக்க வல்லவோ முயன்றான்? நான் வலிந்து பேசியும் அவன் என்னிடம் முகங் கொடுத்துக் கூடப் பேசாது என் சகோதரியையே யன்றோ கடைக்கணித்துக் கொண்டிருந்தான்? இதை நினைத்துப் பார்க்கும் போது தான் என் வயிறு பற்றி யெரிகிறது.— அதோடு நின்றிருந்தால் கூட என் மனம் ஆறுதலடைந்திருக்குமே! என் சகோதார் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறாரே யென்று கூட இல்லாது, அவன் என் சகோதரியோடு எவ்வளவு குதூகலமாக முகத்தோடு முகம் வைத்துப் பேசிக்கொண்டிருந்தான்? அவள் மேல் உராய்ந்த வண்ணம் சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தான்!—அவள்—என் சகோதரி—அவள் மட்டு மென்ன? நாம் ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டிருக்கிறோமே! பிள்ளை கூடப் பெற்றிருக்கிறோமே என்றில்லாது நாணம், பயிர்ப்பு சிறிதுமின்றி, முன்பின்னறியா ஒரு வாலிபனோடு இவ்வளவு சீக்கிரத்தில் இவ்வளவு சகஜமாகவும், அந்நியோந்நியமாகவும் பழகிப் பல்லைக் காட்டிப் பேசுவது எவ்வளவு அக்கிரமம்! (சிறிது நேரம் மௌனம்) ஆ! என்ன! என்ன நினைத்தேன்? என்னுள்ளிருந் தெழுந்த பொறாமைக் குணம் எவ்வளவு சீக்கிரத்தில் என்னை அடிமையாக்கிக் கொண்டது பார்த்தாயா! எனக் கேற்பட்ட ஏமாற்றத்தில்—என் சகோதரியை—என் உடன் பிறந்த சகோதரியை—நற்குடியில் பிறந்து நல்ல குடும்பத்தில் தோன்றி உயர் பதவியிருக்கும் ஒருவருக்கு வாழ்க்கைப் பட்டு கௌரவமா யிருக்கும் என் சகோதரியைப் பற்றி—அவளது ஒழுக்கத்தைப் பற்றி எவ்வளவு கேவலமாகக் கருதி விட்டேன்! அவளது கற்புக்கு என்றும் மாறாக் களங்கத்தையும், விபசாரி யென்ற இழி பெயரையும் உண்டாக்க நினைத்தேன்! நான் பாவி! மகாபாவி!" எனக் கூறிய வண்ணம், முகத்தைக் கவிழ்த்து தலையணையின் மீது அழுத்தியவாறு தேம்பினாள். இந் நிலையில் அவளைப் பார்க்கும் எவரும் மனமுருகாம லிரார். அவ்வளவு பரிதாபமாக இருந்தது.

சிறிது நேரம் இந் நிலையிலேயே கிடந்த தேவகி, திடீரென ஏதோ நினைந்தவள் போல் அவசரமாக எழுந்தாள். பஞ்சணையை விட்டு, அறையின் ஓர் மூலையிலிருந்த மேஜையண்டை நடந்து சென்று அதன் அறையைத் திறந்தாள். அதை யாராய்ந்து பார்த்து கடைசியாக ஒரு படத்தை யெடுத்தாள். அதைக் கண்டதுமே அவள் முகம் சிவந்தது. அது தான் சிவசைலத்தின் உருவப்படம். "ஏ சாயாக்கிரகமே! நேற்று வரை உன்னைப் பார்த்து வந்த எனக்கு எவ்வளவோ மகிழ்ச்சியளித்து வந்தாய்! இன்றோ எனக்கு நீ கொடியையா யிருக்கிறாய்! உன்னைப் பார்த்தாலே எனக்கு அடக்க முடியாத ஆத்திரம் பொங்கி யெழுகிறது. இனி நீ என்னால் போற்றப் படத்தக்க தகுதியை யிழந்து விட்டாய்! என் கண்ணால் இனி உன்னைக் கண்டு சகித்துக்

கொண்டிருக்க முடியாது! நீ என்னை விட்டு இன்றோடு தொலைந்து விட வேண்டியதே!" என்று தேவகி பற்களை இறுகக் கடித்தவாறு கூறிக் கொண்டே அதைத் துண்டு துண்டாகக் கிழித்துக் கீழே போட்டாள்.

பின்னர், அவள் தனக்குள்ளாக ஏதோ முடிவுக்கு வந்தவள் போல் தலையை யசைத்தாள். அதன் பிறகு, தேவகி கைகளைப் பின்னே கட்டிக் கொண்டு இப்படியும் அப்படியுமாக உலாவலானாள். சிறிது நேரம் உலாவியதும், சட்டென நின்றாள். "இன்னமும் அவனை—சிவசைலத்தை—நான் ஏன் நினைத்துக்கொண்டிருக்கவேண்டும்? நான் அவனை மறக்க முயன்றாலும், அவன் உருவம் என் கண் முன் நடனமாடிக் கொண்டிருக்கிறதே!-சே!—இன்றோடு அவனை அறவே நான் மறந்துவிட வேண்டும்! அவனைப் பற்றிய எண்ணம் என் மனதிலெழாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும்! (தலையை அழுத்திப் பிடித்துக்கொண்டு சிறிதுநேரம் அசைவற்று இருந்த பிறகு) நாராயண மேனனை ஏன் நான் காதலிக்கக்கூடாது? சிவசைலத்தைவிட அவன் எந்தவகையில் கெட்டுவிட்டான்? அவனுக்கு அழகில்லையா? படிப்பில்லையா? தகுதியில்லையா? மேலும் அவன் நான் விரும்பா திருக்கையிலேயே என்னை எவ்வளவு அதிகமாக நேசிக்கிறான்? அவனது காதலை யேற்றுக்கொண்டு என் சம்மதத்தைத் தெரிவிக்க வேண்டுமென எத்தனைமுறை எவ்விதமாகவெல்லாம் என்னைக் கெஞ்சிக் கேட்டிருக்கிறான்? மிக விரும்புபவனைப் புறக்கணித்து விட்டு என்னை அவ்வளவாக லட்சியஞ் செய்யாதவன் பின்னே நாய்போ லலைந்து ஒருமொழிக்கு எக்குற்றுக் கிடந்த எனக்கு இவ்வேமாற்றம் நல்ல பாடத்தையே கற்பித்தது; அத்துடன் இது தகுந்த தண்டனையு மாகும். ஆகவே, இதனால் புத்திவந்த பிறகாயினும், என் காதலை நாராயண மேனன்மீது செலுத்துவதே கடமை. உடனே அவனுக்கு வாக்குறுதியளித்து என் தமையனாரின் அநுமதிபெற்று விவாகஞ் செய்துகொள்ள வேண்டும். அவர் இதற்குத் தடையொன்றும் சொல்லமாட்டாரென்றே நம்புகிறேன். ஆமாம்; நாராயண மேனன் உண்மையாகவே காதல் கொண்டிருக்கிறான் என்பது என்ன நிச்சயம்! அவனும் சிவசைலத்தைப்போல் சமயத்தில் மோசஞ் செய்துவிட்டால் என் செய்வது!— சே! என்மீது தன் உயிரையே வைத்திருக்கும் அவன் அவ்வாறு செய்வானா? ஒருகாலும் துரோகஞ் செய்யமாட்டான். நாளை பொழுதுவிடிந்ததும் முதல் வேலையாக………………" என நீள சிந்தித்துக் கொண்டிருக்கும் போது கதவு பலமாகத் தட்டப்படும் சப்தத்தைக் கேட்டு தேவகி திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

அக்கணமே அவள் அவசர அவசரமாக முகத்தை முந்தானையால் துடைத்துக் கொண்டாள்; கூந்தல், உடைகளைச் சீர் திருத்திக் கொண்டாள். கண்ணாடிமுன் தன்னைப் பார்த்து முகத்தில் துக்கக்குறி காணாதவண்ணம் மாற்றிக் கொண்டவாறு நடந்துசென்று கதவைத் திறந்தாள். அவள்முன் கார்த்தியாயினி காணப்பட்டாள். "தேவகி! எவ்வளவு நேரமாகக் கதவைத் தட்டுகிறேன்? ஒன்றுமே பதிலில்லையே! தூங்கிக்கொண்டிருக்…………" எனக் கேட்டவாறு தன் தங்கையை ஏற இறங்க நோக்கினாள். என்னதான் சாமர்த்தியமாய் தன் மனநிலையை மறைக்கமுயன்றாலும், 'அகத்தின் அழகு முகத்தில் தெரியாமல்' போகுமா! தன் சகோதரிதான் கதவைத் தட்டுவாள் என அவள் சிறிதும் எதிர்பார்த்தவளல்லளாதலால், கார்த்தியாயினியைக் கண்டதும் தேவகி தலையைத் தொங்கப் போட்டுவிட்டாள்.

பாத நாட்டியக் கச்சேரி நடந்து கொண்டிருக்கையில், இடையிலேயே தேவகி எழுந்துவந்து விட்டதை, கார்த்தியாயினி சிவசைலத்தோடு குதூகலமாகப் பேசிக்கொண் டிருக்கையிலும், கவனித்துவிட்டாள். அவள் அவ்வாறு திடீரென எழுந்து போய்விட்டதற்கு ஏதோ காரணமிருக்கவேண்டுமென்று அப்போதே ஊகித்தாள். முதலில் தேவகி எழுந்து போகும் போது, 'ஏதோ காரியமாக வெளிச் செல்கிறாள்; சிறிது நேரத்திற்

கெல்லாம் திரும்பி வந்து விடுவாள்' எனக் கார்த்தியாயினி நினைத்தாள்; இரண்டொரு விநாடிக் கெல்லாம் நாராயண மேனனும் எழுந்து தேவகி சென்ற வழியே போனதைக் காணவே, அவள் புன்முறுவல் பூத்தாள். அவள் வந்த ஒரு வாரமாக நாராயண மேனன் தேவகியிடம் பழகும் மாதிரியைப் பார்த்து வந்தவளாகையால், இருவரும் ஒருவரை யொருவர் காதலிப்பதாக அவள் அநுமானித்தாள். எனவே, இச்சமயம் அவர்கள் ஒருவர் பின்னொருவராகச் செல்லவே, இளங் காதலர்கள் தனித்துரையாடி மகிழ விரும்பினர் போலும் எனக் கருதினாள். நாராயண மேனன் நற்குணமும், கம்பீரமும் வாய்ந்த வாலிபனாகையால், அவன் தன் தங்கையான தேவகிக்குத் தகுந்த காதலனே என எண்ணி, அவர்களது காதல் கொடி இடையூறின்றி வளர்ந்து திருமண மலர் பூக்கவேண்டுமென்று மனமுவந்து விரும்பினாள். ஆனால், தேவகி சிவசைலத்தை மனமாரக் காதலிக்கிறாளென்பது இவளுக்குத் தெரியாது. அவன் இந்த ஒருவாரமாகத் திவான் மாளிகைக்கு வந்திருந்தால், அப்போது தேவகி அவனுடன் அளவளாவிப் பேசும் விதத்திலிருந்து, கார்த்தியாயினி தேவகியின் உண்மையான மனநிலையைத் தெரிந்து கொண்டிருந் திருப்பாளோ என்னவோ! இப்போது தேவகியைப் பின் தொடர்ந்து சென்ற நாராயண மேனன் கால் மணி நேரத்துக் கெல்லாம் வாட்ட முகத்தோடு திரும்பி வந்து தன் ஆசனத்தில் அமர்ந்ததை அவள் பார்த்ததுங் காரணமறியாது மயங்கினாள். அதுவன்றியும் தேவகி கச்சேரி முடியும்வரை திரும்பி வாராமல் போகவே, கார்த்தியாயினிக்கு சந்தேக மேற்பட்டது. இதனால் மனக்குழப்ப மடைந்த கார்த்தியாயினி கச்சேரி முடிந்ததும், திவானிடத்திலும், இவனிடத்திலும் விடை பெற வந்த விருந்தினர்களை இவள் தன் சகோதரரோடு சேர்ந்து இன் முகத்துடன் வழி யனுப்பினாளாயினும், அவள் உள்ளூற பரபரப்பையும், துரிதத்தையுங் காட்டினாள். சிவசைலம் கார்த்தியாயினியின் அருகேயே இருந்தான். கடைசியாக, சிவசைலமும் நாராயண மேனனும் பின்னே வர, ஸர். பரமேஸ்வரன் பிள்ளையும், கார்த்தியாயினியும் மண்டபத்தை விட்டு மாளிகைக்குள் சென்றனர். அப்போதும் திவான், தேவகுஞ்சரி பாலசரஸ்வதியின் பரத நாட்டியச் சிறப்பைப் பற்றியும், அழகைப் பற்றியுமே பிரமாதமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

முதலில் கூடத்தை யடைந்ததும், கார்த்தியாயினி அங்கு தேவகி இருக்கிறாளா என்றே தன் கண்களால் ஆராய்ந்தாள். ஆனால், கமலா தேவியும் பணிப்பெண்களுமே காணப் பட்டனர். ஆகவே கார்த்தியாயினி தன் சகோதரர் பக்கம் திரும்பி ஏதோ உட்கருத்தோடு நோக்கினாள். இதற்குள், நாராயண மேனன் தான் வீடு செல்ல விடைபெற்றான். எனவே, சிவசைலத்துக்குக் கார்த்தியாயினியைவிட்டுப் பிரிய மனமில்லை யாயினும் வேறு வழியின்றி, அவனும் விடைபெற்று வெளியேறினான். இவர்கள் இருவரும் செல்கையில், கார்த்தியாயினியின் கூரிய பார்வை நாராயண மேனன் முகத்தை ஆராயலாயிற்று. அவனது மனம் சங்கட முற்றிருப்பதை அவன் முகங் காட்டியது. அவர்கள் வெளியே சென்றதும், கார்த்தியாயினி நேராக, தேவகி அறையை நோக்கி நடந்தாள். கதவு உள் தாளிடப்பட் டிருக்கவே, தேவகி உள்ளே இருக்கிறாளென ஊகித்து மன திருப்தியோடு கதவைத் தட்டலானாள். வெகுநேரம் வரை கதவு திறக்கப் படவேயில்லை. தேவகிதான் மானத உலகில் சஞ்சரித்து நெஞ்சோடு போராடிக் கொண்டிருக்கிறாளே! அப்படியிருக்க, அவளுக்கு எப்படி அவ்வளவு சீக்கிரத்தில் காது கேட்கும்? கடைசியாக, கார்த்தியாயினி தன் பல முழுவதையும் உபயோகித்து கதவைப் பலமாகத் தட்டினாள். அப்புறந்தான் தேவகி சிந்தனை கலைந்து தன்னுணர்வு பெற்று விரைந்தெழுந்து தன்னைச் சீர்திருத்திக்கொண்டு கதவைத் திறக்கலானாள்.

"இல்லை அக்கா! தலைவலியா யிருந்தது. அப்படியே தூங்கி விட்டேன். அதனால் நீ கதவு தட்டியது காது கேட்கவில்லை" எனக் கார்த்தியாயினியை நேரே பாராது முகத்தைத் திருப்பிக் கொண்டு கூறினாள்.

கார்த்தியாயினிக்கு அவள் கூறிய சமாதானம் அவ்வளவு திருப்தியளிக்கவில்லை. அழுகையால் வீங்கிய தேவகியின் முகம், அவள் உண்மை உரைக்காது மறைக்கிறாள் என்பதை கார்த்தியாயினிக்குப் புலப்படுத்தியது. இருந்தாலும் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாது, "மருந்து போடுவது தானே!" எனச் சாவதானமாகக் கூறினாள்.

தேவகி, "இப்போது தலைவலியில்லை' என்றாள். கார்த்தியாயினி வெளித் தோன்றிய புன்னகையை மறைக்க உதட்டைக் கடித்து, "சரி; அப்படியானால் வா சாப்பிடப் போகலாம்; சகோதரர் நமக்காக காத்துக் கொண்டிருக்கிறார்" என்று கூறிய வண்ணம் தேவகியின் கையைப் பிடித்து அழைத்துச் சென்றாள்.

அதற்குமேல் வேறு சாக்கு போக்கு கூற முடியாமையால் தேவகி கார்த்தியாயினியின் பின்னே நடந்தாள்.

அன்றிரவெல்லாம் கார்த்தியாயினிக்கு தேவகியிடம் திடீரென ஏற்பட்ட மாறுதலுக்குரிய காரணத்தை யறிவதிலேயே கவனஞ் சென்று கொண்டிருந்தது. எனவே, அவள் சிவசைலத்தைப் பற்றி நினைப்பதற்கு அவகாசமேற்படவில்லை. மறுநாள் பொழுது விடிந்ததும், கார்த்தியாயினி, தேவகியைப் பற்றிப் பணிப்பெண்களிடம் மெல்ல விசாரிக்கலானாள். அவ் விசாரணையிலிருந்து, தேவகி சிவசைலத்தோடு அந்நியோந்நியமாகப் பழகி நேசித்து வருபவளென்றும், அவன் ஒருநாள் வாராவிட்டால், அவள் மிகவுந் துடி துடிப்பாளென்றுந் தெரிந்து கொண்டாள். தான் நாராயண மேனனைத் தேவகி காதலித்து வருவதாக நினைத்தது தவறென்றும், தன்னுடன் சிவசைலம் நெருக்கமாகப் பழகுவதே தேவகியின் மனமாறுதலுக்குக் காரணமென்றும் அவள் அறிந்து கொண்டாள். எனவே தன்னால் சகோதரிக்கு மனவேதனை ஏற்படுவதாயின், தான் இனி இங்கிருப்பது தகுதியன்று என்ற முடிவுக்கு வந்த கார்த்தியாயினி திடீரென அடுத்தநாளே சென்னைக்குப் புறப்பட்டு போய்விட்டாள்.

(தொடரும்.)

அடுத்த இதழில் இதுவரையிலும் யாவராலும் கொடுக்கப்படாத நூதனமான மோட்டார் பைசிகள் போட்டியை எதிர்பாருங்கள். உங்கள் ஒவ்வொருவருக்கும் எட்டு அணாவிற்கு கிடைக்கும். அடுத்த இதழை ஆவலுடன் எதிர்பாருங்கள்.



'பட்டுவின் பரீக்ஷை'

—:o:—

(எஸ். முத்துசாமி.)

"வாவா மாமியார் கழுதை போலானாளாம்" என்ற மாதிரியாக வல்லவோ இருக்கிறது உன் விஷயம்! துஷ்டப்பயலே; சொல்வதைக் கேட்கமாட்டேனென்று பிடிவாதம் செய்கிறாய்?" என்று சாம்பசிவய்யர் ஓர் சிறுவனைப் பிடித்து அதட்டி அடித்துக் கொண்டிருந்தார்.

"ஆமாம், அவனுக்குச் சோம்பல் மிகுந்துவிட்டது பாருங்கள், நேற்று எனக்குத் தலைவலியென்று பட்டுவை இவனிடமிருந்து வெந்நீர் கொண்டுவரச் சொன்னேன். இதைச் செய்வதைவிட இவனுக்கு வேறென்ன வேலை? சமையல்காரக் கழுதைக்குப் படிப்பாம்." என்று அவ்வறையிலிருந்த சோபாவிலிருந்த வண்ணம் அவரது மனைவி மங்களம்மாள் தன் குறையைப் பாடினாள்.

"ஆமாம், இல்லை; மாமி சொல்லுவது........................" என்று அவ்விளைஞன் கூறத் தொடங்குகையில் ஐயர் கோபத்துடன் அவன் கன்னத்தைக் கிள்ளி, "சங்கரா, பேஷ், என்னை எதிர்த்து வேறு பேசத் துணிந்தாய்? கொஞ்சநாளாக நீ தலைதுள்ளி நிற்கின்றாய். பாவம் போகட்டுமென்றிருந்தேன். சரி.......... பட்டு.................இவன் நேற்று அப்படிச் சொன்னது உண்மைதானா?" என்று கேட்டார். அப்போது அங்கு ஓடி வந்த சிறுமி, "அது நிஜந்தான்.......................... ஆனால்...........அப்புறம்," என்று முடிப்பதற்குள் ஐயர் அவனை யொரு பக்கத்தில் தள்ளிவிட்டு, "அடே சோம்பேறி; நீ இங்கு இருப்பதற்குத் தகுந்தவனல்ல. வெளியே போ; சோம்பேறி மடம் அல்ல இது" என்று வாயில் பக்கமாகக் கை நீட்டினார். அச்சிறுவன் கண்ணீராய் வெந்நீருகுத்துக்கொண்டு அவர் பாதங்களைப் பற்றி, "மாமா, மாமா, இந்த தடவை என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்; இனி சரியாக நடப்பேன்" என்று இறைஞ்சினான். "மரியாதையாகச் செல்......................சரி, யாரடா அது............ பழனி இவனை வெளியே தள்ளு" என்று ஐயர் அவனை யுதைத்தார்

சாம்சிவய்யர் அவ்வூரின் தாசில்தார்; கொஞ்சம் முன் கோபி, இவருக்கு ஏராளமான பிதிரார்ஜிதம் இருந்ததன்றிச் சென்னை பாங்கியில் அரை லக்ஷம் இருந்தது. வெகு காலமாகப் புத்திரப் பேறேயின்றி ராஜலக்ஷ்மி என்ற பெண் பிறந்து எட்டு ஆண்டுகள் ஆகிறது. இப்பெண்ணைப் 'பட்டு' என்ற செல்லப் பெயரால் அழைத்ததே இவர் அவளை எத்தனைப் பரிவுடன் வளர்த்தார் என்பது விளங்குகிறது. இவருக்குத் தூர உறவினர் ஒருவரது புத்திரனாய சங்கர நாராயணனை, பெற்றோர் உற்றோர் அற்றவனைத் தம் இல்லத்திற் கழைத்துச் சமையல் செய்ய ஏற்பாடு செய்தார். இவனுக்குப் பேசப் போதுமான ஆங்கிலப் பயிற்சியும் அளித்தார். மங்களவல்லியம்மாள் இவன்மீது குற்றங் கூறினாலே யன்றிப் பின் அவன் வெந்நீர் கொணர்ந்ததைக் கூறுதுவிட்டாள்.

வெளியே தள்ளப்பட்ட சங்கரன் அவ்வூரிலுள்ள வீடுகளில் தனக்குக் கொஞ்சம் ஆகாரம் கொடுக்க வேண்ட, இரக்க முள்ளாரும் கொடுக்க வியலாதவாறு தாசில்தாரின் ஆக்கினையால் அன்னோர் கொடுக்க அஞ்சினர். பசி காதடைக்கின்றது. இத்தகைய துன்பத்துடன் அவன் ஊருக்கு அப்பாலுள்ள சோம்பேறி மடத்துக்குச் சென்று தன் விதியை நினைத்து விம்மிவிம்மி அழுதுகொண்டு உறங்கிவிட்டான். இரவு எட்டுமணி இருக்கும். ஆகாயத்தில் மேகங்கள் கூடியதால் இருள் சூழ்ந்தது; இவ்வமயம் தன்னருகு ஏதோ சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்தான். (அம்மடத்தில் இவனுடன் வேறு எவருமிலர்.) தன்னெதிரில் ஏதோ ஓர் உருவம் இருக்கக் கண்டு உடல் நடுக்கத்துடன் எழுவியலாது கண்ணை மூடிக்கொண்டான். "சங்கரா, பயப்படாதே; நானுனக்கு நிறைய சாதம் கொண்டுவந்திருக்கிறேன். நாளை இரவும் இம்மாதிரியே வருகிறேன்" என்று அவனருகிருந்த ஓர் குரல் கூறிற்று. "பட்டு, என்ன இது! இங்கு எப்படி வந்தாய்?" என்று கேட்டான் சங்கரன். "கோமளம் வீட்டுக்குப் போகிறேன் என்று நான் இங்கு வந்துவிட்டேன். என்னை நீ பொறுப்பாயா!" என்று அன்புடன் வினவினாள் பட்டு.

"எதற்காக? நீ என்ன பிழை செய்தாய்!"

"நான்தானே உன்னை அப்பாவிடத்தில் காட்டிக் கொடுத்தேன். நீ ஆத்துக்கு வா; அப்பா ஒன்றும் சொல்ல மாட்டார்."

"நான் ஆத்துக்கு வந்து தண்டச் சோறு தின்பதா?"

'ஊஹூம்' என்று அழுதுகொண்டே

"என் மேல்............உனக்கு........பிரியம் இல்................" என்று சொல்லி முடிப்பதற்குள், சங்கரன் அவளருகு வந்து, "பட்டு, அழாதே; நீ ஆத்துக்குப் போக வேண்டாமா? நான் சொல்வதை நம்பு. எனக்கு உன்பேரில்தான் அதிகப் பிரியம். அழாமலிரு." என்று தடவிக் கொடுத்தான். "நிஜமாகவா!" என்று பட்டு அவனைக் கட்டிக் கொண்டாள்.

மிக்க விசனத்துடன் பட்டு வீடு சென்றாள். மறுநாள் சங்கரன் ஊரிலேயே இல்லை என்று தெரிய வந்தது. யாவரும் வருத்தப்பட்டாரெனினும், ஓர் இளம் இருதயம் மட்டில் வெடித்துவிடும் போலிருந்தது. தனியாக இருக்கும் சமயங்களில், பட்டு, கண்களில் தாரை தாரையாக நீரைப் பெருக்கினாள்.

* * *

மாறுதல் என்பதுள்ள இவ்வாழி சூழ் வையத்தில் காலச்சக்கரம் ஓய்வின்றிச் சுழன்றுகொண்டே இருக்கிறது. இன்றைக் கிருப்பாரை நாளை காணலரிது; இன்றைக்குத் தனவந்தராய் யாவராலும் போற்றப்பட்டிருப்பவர்கள், நாளை அரை வயிற்றுக் கஞ்சிக்குக்கூடக் கதியின்றித் தவிப்பர்; இல்லா யிருப்போர் கோடீஸ்வரராகி விடுவர். இது உலகத்தினியல்பு.

சங்கரன் காணாது சென்ற ஒரு திங்களில் சாம்பசிவய்யர் தம் வேலையை ராஜிநாமா கொடுத்துவிட்டுச் சென்னையிலேயே குடியேறினார். அங்கு நண்பர் பலரது மாயையிற் சிக்கித் தம் சொத்து முழுவதையும் குதிரைப் பந்தயத்திலேயே இரண்டாண்டுகளுக்குள் இழந்தார். பின், மனைவி பெண்களது அணிகலன்களைப் பறிகொடுத்தார். கடைசியாக, வீட்டிலுள்ள விலையுயர்ந்த பொருள்கள் யாவற்றையும் அடகு வைத்துத் திரும்பி, அவற்றை வாங்க இயலாது சென்றது. ஓர் சிறு வாடகை வீட்டில் வசிக்கத் தொடங்கினார்; முன்னிருந்த நயவஞ்சக நண்பர்கள் விலகினர். இந்த இரண்டு வருடங்களுக்குப் பின்னும் நண்பராயிருந்து இவர்களுக்கு அவ்வப்போது உதவியவர் சுமார் ஐம்பது

வயதுள்ள ஓர் வயோதிகர். 'நாராயணையருக்கு மனைவி மக்கள் சுற்றத்தார் யாருமிலர். இவருக்கும் பாங்கியில் பணமிருந்தது. சாம்பசிவய்யர் இவரைத் தம் வீட்டிலேயே தம் சகோதரர்போல் பாவித்து இருத்திக் கொண்டார். ஐயருக்கோ அரைமணி நேரங்கூட ஓர் வேலையைத் தொடர்ந்து செய்யவியலாது. ஆதலால், அவரது மனைவியும் பட்டுவும் தினந்தோறும் தம்மாலியன்ற நூல் நூற்று ரான் அண்டு கம்பெனியிற் கொடுத்து (Rann & Co.,) இதற்குப் பதில் பன்னிரண்டணாவோ பத்தணாவோ வாங்கிக் கொள்வர். இவ்வாறு இரண்டு ஆண்டுகள் செல்ல ரான் கம்பெனியின் மானேஜர் இறந்து வேறொரு இந்தியர் மானேஜராக வந்தார். இவர் சாம்பசிவய்யரின் குடும்பத்துக்குத் தினம் ஒரு ரூபாய் கொடுத்ததன்றிச் சிற்சில சமயங்களில் வெகுமதிகளும் அளிப்பார்.

இவை யாவும் ஏழு வருடங்களில் நடந்தன. திடீரென்று ஒருநாள், சாம்பசிவய்யர் நாராயணையரை நோக்கி, "ரான் கம்பெனியின் மானேஜர் உமக்கு உறவினரோ?" என்று வினவினார். சட்டென்று வயோதிகர் முகத்தில் மாறுதலுண்டானதையும் உடனே அம்மாறுதல் மறைந்ததையும் ஐயர் கவனிக்கவில்லை. வயோதிகர் கோபமுற்றதுபோல் முகத்தைச் சினுக்கினார்; ஐயர் தமது அதிகப்பிரசங்கத்துக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

இராஜலக்ஷ்மிக்குப் பதினைந்து வயது ஆகிவிட்டது. ஐயரும் அவரது மனைவியும் இவளது மணத்தைப்பற்றி யோசிக்கலாயினர். கையிலோ பணமில்லை; வயோதிகரைக் கேட்பதோ—சே, அதைவிட வெட்கக்கேடு வேறொன்றுமில்லை; பெண்ணுக்கோ வயதாகிவிட்டது. வரதக்ஷிணையோ ஆயிரத்துக்குக் குறைய மாட்டேனென்கிறார்கள். வரதக்ஷிணையில்லாது—அது, கனவிலும் கருத முடியாது. "இருதலைக் கொள்ளி எறும்பு"போற் றவித்தனர்! அந்தோ, வரதக்ஷிணைக் கொடுமையே!! பெண்ணை விற்பதோ!!!

ஒரு வெள்ளிக்கிழமை யன்று ஐயரும் அவரது பத்தினியும் (அவளுக்கு தேகம் கொஞ்சம் அசௌகரியமா யிருந்ததென்றதால்) பட்டுவையும், (அவளுக்குத் துணையாக) நாராயணையரையும் வீட்டில் இருத்திவிட்டுக் கோவிலுக்குச் சென்றனர். அவ்வமயம் நாராயணையர் பட்டுவைத் திடீரென, "பட்டு, நீ ஏன் நாளுக்கு நாள் மெலிந்து வருகிறாய்? உன் மனதில் ஏதோ இருந்துகொண்டு உன்னை உருக்குகிறது. பொய்யை மறைத்து உண்மையைச் சொல்லம்மா" என்று வினவினார். பட்டு திடுக்கிட்டவளாய் "ஒன்றுமில்லை" என்று முணங்கிக்கொண்டே ஓட யத்தனித்தாள். "அம்மா, இவ்வளவுதானா உனக்கு என்மீதுள்ள அன்பு! நான் ஒருவரிடமும் சொல்வதில்லை. நீ அஞ்சவேண்டாம்; உன் மனதிலுள்ளது கூடிய சீக்கிரம் கைகூடப் போகிறது" என்றார். பட்டு நாணித் தலைகுனிந்துகொண்டு, "உங்களுக்குத்தான் தெரியும் போலுள்.... ...." என்று மெல்ல கூறிக்கொண்டிருக்கும்போது, கிழவர், "பட்டு, நீ ஒன்றும் பேசவேண்டாம். நீ எதிர்பாராத ஒன்று கூறப்போகிறேன்; அதை யொருவரிடமுங் கூறாதே" என்று அவள் காதில் என்னமோ இரகசியமாய்க் கூறினார். பட்டு திடுக்கிட்டு ஆச்சர்யம் வழிந்த முகத்துடன் அக்கிழவரின் முகத்தை யுற்றுப் பார்த்தாள். "நீ அதிசயப்படுவது இயற்கையே" என்று சிரித்தார். அப்போது ஐயர் வந்துவிட்டார்; பட்டுவும் சென்றுவிட்டாள்.

மறுநாள், பட்டுவின் மணத்தைப் பற்றிய பேச்சு வந்தபோது, நாராயணையர், "ஐயர்வாள், இவ்வளவு கஷ்டமேன்? நானே இத்தனை ஆண்டுகளாகப் பிரம்மசாரியாகக் காலங்கழித்தேன்; தாடிமீசை இருக்கிறதென்று பார்க்கிறீர்களா? எடுத்துவிட்டாற் போகிறது. பட்டுவை இராணிபோல் வைத்துக் கொள்வேன். உங்கள் சம்மதந்தான் வேண்டும்" என்றார்.

"பட்டு, இந்த மாமா என்னமோ சொல்கிறார். இவரை மணந்துகொள்ள

உனக்கு விருப்பமா?" என்று கேட்டார் ஐயர். இராஜலக்ஷ்மி முகம் சிவப்பேறப் பதில் பேசாமற் சென்றுவிட்டாள். "இவள் பேசாதிருத்தலினால் இவளது விருப்பம் தெரியவில்லையோ?" என்றார் கிழவர். "எதற்கும் யோசிக்கிறேன்."

அன்று நான் கம்பெனிக்குச் சென்றுவிட்டுத் திரும்பும்போது ஐயர் முகத்தில் ஆச்சர்யமும் குதூகலமும் தவழ்ந்திலங்கின. மங்கள வல்லியம்மாளிடம் சென்று, "அடி, ஒரு அதிசயம்" என்று இரைக்க இரைக்கக் கூறினார். அதே சமயம் ஓர் அழகிய மோட்டார் அவர்கள் வீட்டெதிரில் வந்து நின்றது. அதனின்று சுமார் இருபத்தொரு வயதென மதிக்கத்தக்க வாலிபன் வீட்டினுள் நுழைந்து, மங்கள வல்லியம்மாளுக்கு நமஸ்காரஞ் செய்து, "மாமீ, உங்களால்தான் நான் இவ்வளவு முன்னுக்குவர சந்தர்ப்பமேற்பட்டது" என்று கூறினான். அவள் ஆச்சரியமடைந்து அவ்வாலிபனை யுற்றுப் பார்த்துவிட்டு, "சங்கரா, நீ சங்கரனா? இது கனவா? நினைவா? சங்கரா, இத்தனை நாட்களாக எங்கு போயிருந்தாய்? நான் என் மதியீனத்தாலும் உன்மீதிருந்த ஏதோ ஒருவிதமான துவேஷ.......... உன்னைத் துரத்.......... என்னை மன்னிப்பாயா?" என்று கண்ணீர் விட்டாள். "மாமீ, நடந்ததைப்பற்றி நினைத்து வருந்தவேண்டாம்" என்று சங்கரனாகிய அவ்வாலிபன் அவளைத் தேற்றும்பொழுது, ஐயர், "அடி நாராயணையர் எங்கே?" என்று கேட்டார். "ஓகோ, அக்கிழவரா? என்னை அவருக்குத் தெரியும்" என்று சொல்லிவிட்டுச் சங்கரன் 'சடக்'கென மோட்டாரில் ஏறிக்கொண்டு அதை யோட்டினான். அவன் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் வயோதிகர் மெல்ல வீட்டிற்குள் நுழைந்து, "என்ன ஐயர்வாள், நீங்கள் கூப்பிட்டதாகக் கம்பெனி மானேஜர் சொன்னார். என்ன விசேஷம்?" என்றார். "இல்லை. அந்த மானேஜர் தாம் நான் உமக்கு முன்பு கூறினேனே, அச்சங்கரன். இன்று காலைதான் அவன் அதை யெனக்குத் தெரிவித்தான்" என்று ஐயர் கூறியவுடன், பட்டுவும் ஐயர் மனைவியும் ஆச்சர்யப்பட்டனர். வயோதிகரும் அதிசயத்தவர் போல் தோன்றினர். அரைமணி நேரமாகியும் சங்கரன் வரவில்லை. கடைசியில் கிழவர் பொய்த்தாடி மீசைகளைக் களைந்தெறிந்தவுடன் அங்கு சங்கரன் நின்றான். "மாமா, நீங்கள் கொடுத்த வாக்கை மறக்கக்கூடாது. இனிமேல் யோசனையே வேண்டாம். பட்டுவைப் பணப்பிசாசின்றி நான் ஏற்றுக் கொள்கிறேன். அவளுக்கு நான்தான் நாராயணையர் என்று தெரியும்; நீங்கள் கூறியபின் நானே மானேஜர் என்றும் அறிந்தாள். உங்களுக்கு எல்லோருக்கும், நான் இங்கு எப்படி வந்தேன் என்பனவாதிய வரலாற்றையறிய விருப்பம் இருக்கும்" என்று கூறிவிட்டுச் சங்கரன் பட்டு அன்றிரவு ஆகாரம் ஈந்ததைக் கூறினான். யாவருக்கும் ஆச்சர்யத்துக்கு மேல் ஆச்சர்யம் உண்டாயிற்று.

"பின்னர், எனக்கு அங்கிருக்க இஷ்டமின்றி பக்கத்தூரிலுள்ள இரயில்வே ஸ்டேஷனில் கூலிவேலை செய்தாவது பிழைக்கலாம் என்று, அப்பொழுதே புறப்பட்டுக் காலை ஸ்டேஷனை யடைந்தேன். அங்கொரு மகான் எனக்குச் சென்னைக்கு டிக்கட் வாங்கிக் கொடுத்து, இங்கு நான் கம்பெனியில் நூல் நூற்றுக் கொடுக்குஞ் சிறிய வேலையிற் சேர்த்துவிட்டுச்சென்றார். இன்றுவரைக்கும் அவர் என்கண்ணுக்குப் படவேயில்லை. இப்படியே ஈராண்டுகள் கழிந்தபின் (எனக்குச் சுமாராக ஆங்கிலம் பேச வெழுதத் தெரியுமாதலின்), நான் மாதம் முப்பது ரூபாயுள்ள ஓர் எழுத்து வேலைக்கு மாற்றப்பட்டேன். இந்த வேலையிலும் இரண்டு வருடங்கள் இருந்தபின் திடீரென்று நூறுரூபாயாக என் சம்பளம் உயர்த்தப்பட்டது. இவ்வாறே ஐந்து வருடங்களின் முடிவில் எனக்குப் பாங்கியில் பத்தாயிரம் ரூபாய் இருந்தது. நான் சென்னைக்குவந்து இரு வருடங்களில் நீங்க ளிங்கிருத்தலை யறிந்து என் கோலை மாற்றிக்கொண்டு, கிழவருருத் தரித்து நாராயணையர் எனும் பெயர் பூண்டு, உங்களுக்கு நண்பாகி உங்கள் நிலைமை நன்கறிந்துகொண்டேன். என்னாலியன்ற

வரை யவ்வப்போது உதவியும் செய்து வந்தேன். இதனிடையில் நான் கம்பெனிக்கும் சென்றுவந்தேன். நீங்கள் ஒருவரும் நானெங்கு செல்கிறேனென்பதை யறிய ஆவல் கொள்ளாதது என்ன திர்ஷ்டமே. நான்காண்டுகளுக்குப் பின் இக்கம்பெனியின் மானேஜர் இறந்து விட்டார். இந்த நான்கு வருடங்களில் கம்பெனியின் விஷயம் எல்லாவற்றையு மறிந்து கொண்டதன்றி அம்மானேஜரின் உண்மையான அன்பையும் பெற்றேன். இவரது மனைவி இறந்துபோய் ஒரேயொரு புத்திரன்தான் இருந்தான். இறக்குந்தருவாயில் இவரது சொத்தாகிய பத்துலக்ஷ ரூபாயில் எனக்கு இரண்டுலக்ஷம் எழுதி வைத்ததன்றி நானே மானேஜர் பதவியை வகிக்க வேண்டும் என்றும் கூறினாராம். இவ்விஷயம் இவர் இறப்புக்குப் பின்புதான் எனக்குத் தெரியவந்தது. நான் மானேஜராக வந்தவுடன் உங்கள் நூலுக்கு மதிப்பு அதிகம் கொடுத்தேன். பின்னர் இனி நான் யாரென உங்களுக்கு விளக்க வேண்டுமெனக் கருதி நீங்கள் கோயிலுக்குப் போனவன்று நான்தான் சங்கரனென்று பட்டுவுக்குத் தெரிவித்தேன். இன்றுகாலை உங்களுக்குத் தெரிவித்தேன்.” என்று சங்கரன் தன் வரலாற்றை யொருவாறு சுருக்கமாகக் கூறி முடித்தான்.

இவன் எதிர்பாராதவிதமாக அன்று தன்னைச் சென்னையிற் சேர்த்த மகானைத் தற்செயலாகச் சந்தித்தான். இருவருக்கும் முகம் ஒத்திருந்ததுகண்டு சாம்பசிவய்யர் மயங்கினர். அம்மனிதரும் சங்கரனது காதுகளை ஒருவிதமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். இவ்வாறு நெடுநேரம் ஆனபின் அவர் சங்கரனை திடீரென்று அணைத்துக்கொண்டு உச்சிமோந்து, “என்னருமை விஸ்வநாதா; நீ இங்கு எப்படி வந்தாய்? நானுன்னை இழந்து இருபது ஆண்டுகள் ஆகிறதே! செல்வமே, உன் வரலாற்றைக் கூறமாட்டாயோ? ஆம், உனக்கு என்னை யடையாளந் தெரியவில்லை. உன் தாயார் உன்னைத் தேடிக்கொண்டு வானுலகு சென்றுவிட்டாளே! ஆ, நான் பாவி! இரயிலிலேயே உன்னை நன்கு கவனிக்காது விட்டேனே! உன் காதின் உள்புறத்தில் ஒருவிதமான மேடும் அதனருகு பச்சையான பெரிய மச்சமும் இருக்கிறது................” என்று சங்கரனும் சாம்பசிவ அய்யரும் ஆச்சரியப் படும்படியாகப் புலம்பினர்.

அம்மனிதர் இவ்விருவரது மனதைப் படித்தவர்போல், “ஐயா, நீங்கள் ஆச்சரியமும் படலாம்; என்னைப் பைத்தியக்காரனென்றும் நினைக்கலாம். ஆனால் இவன் எனது விஸ்வநாதனே. இருபது ஆண்டுகட்கு முன் நானும் என் மனைவியும் இக்குழந்தையுடன் கோயிலுக்கு உற்சவத்துக்குப் போய்த் திரும்பி வருகையில் எங்கள் பின்னே வந்துகொண்டிருந்த இக்குழந்தையைக் காணாது திடுக்கிட்டோம். எங்களாலானவரை தேடிப்பார்த்தும் எங்களாலியலாததால், நாங்கள் மறுநாள் போலீசில் இக் குழந்தையைப் பற்றித் (காது அடையாளத்தையுங் குறித்து) தெரிவித்தோம். அவர்கள் ஒருவாரந் தேடிப்பார்த்தும் பயனற்றதானதால் நாங்கள் மிக்க வருத்தமடைந்தோம். இரண்டு வருடங்களில் என் மனைவி இச்சோகத்தால் இறந்தாள். இவனை இரயில்வே ஸ்டேஷனிற் கண்டவுடன் எனக்கொருவிதமான அன்புண்டாகிச் சென்னையிற் சேர்த்துவிட்டு என் ஊராய பங்களூருக்குச் சென்றேன். நேற்று இவனைப் பார்க்கவெண்ணி இங்கு வந்தேன். இன்று இவனே எனது காணமற்போன புத்திரன் எனவறிந்தேன். இவனை நீங்கள் வளர்த்த வரலாறு என்ன?” என்று வினவினர்.

ஐயர் திடுக்குற்றவராய், “இவனைக் கண்டவுடன் ஏதோ ஓர்குழந்தை; வீணாக யாரேனும் கொன்றுவிடுவார்களோ என்ற அச்சத்தினாலும், எங்களுக்குக் குழந்தையில்லாததினாலும், (இவனை) எங்கள் குழந்தையாக வளர்ப்பதென்று தீர்மானித்தோம். நான் கமலாபுரம் தாசில்தாராதலாலும், இந்த உற்சவத்தைப் பார்ப்பதற்காகவே இங்கு வந்தேனாதலாலும் மறுநாள் கமலாபுரம் அடைந்தோம்” என்று

கூறித் தான் அவனைத் தூரத்தியது ஆதிய வற்றை ஒளிக்காது, இவனைக் கண்டு பிடித்தவரைக் கூறிவிட்டு, அம்மனிதருக்கு நமஸ்காரஞ்செய்து, "ஐயா, உம் புத்திரனை நான் ஒளித்துவைத்து உம் மனைவியை இழக்கச் செய்ததுமன்றி, இவ்வளவு கொடுமையாக அவனை நடத்தியதற்கு இதுதான் தண்டனை" யென்று தொண்டையை யழுத்திக் கொண்டார். தந்தையும் தனயனும் திடுக்கிட்டு, மூர்ச்சையாகி விழச்சென்ற ஐயரைப் பிடித்து மூர்ச்சை தெளிவித்தனர். யாவரும் ஐயர் இல்லத்திற் கேகினர்.

* * *

"பட்டு, நாம் இருவரும் ஒரே ஜாதியாக இருந்தது நம் அதிர்ஷ்டமே." என்று விஸ்வநாதன் (சங்கரன்) தன் மனைவியாய பட்டுவினிடங் கூறினான்.

"நாதா அப்படியானால் இப்போதும் என்மீது உண்மையன்பு இல்.........."

"சே, நான் ஈன ஜாதியாக விருப்பினும் உன்னை மணக்காது விடேன். எனக்கு உன் அன்பின் ஆழம் தெரியும். உன் அன்பை எழுவருடங்களாகப் பரீக்ஷித்தேன். இதற்கு என்னை மன்னிப்பாயா?"

"நாதா, இப்படிப் பேசவேண்டாம். என்னுடல் பொருளாவி யாவும் உம்முடையதே." என்று இராஜலக்ஷ்மி அன்பொழுகக் கூறினாள்.

விஸ்வநாதன் அவளது கூற்றை மெய்ப்பிப்பவன் போல், இராஜலக்ஷ்மியைச் சேர்த்தணைத்து முத்தமிட்டான்.

டாக்டர் மனைவி:—ஐயோ! தலைவலியினால் உயிர் போகிறதே!

டாக்டர்:—அதற்கென்ன செய்கிறது! நான் வைத்தியம் செய்யும் நேரம் காலை 10-மணி முதல் சாயந்திரம் 4-மணி வரையில்தான்.

"ருக்ஷா" அல்லது காதல் மணம்

—:(0):—

(கே. வி. அனந்தகிருஷ்ணையர்.)

மதுரையம்பதி ஓர் வீதியின்கண் எழில் மிகுந்த ஓர் மாளிகையில் பட்டுமெத்தை விரிக்கப் பெற்ற ஓர் மஞ்சத்தின்மீது சயனித்திருக்கும் சுமார் நாற்பத்தைந்து வயதே நிரம்பிய ஓர் ஆடவரை அன்னவர் தம் பத்தினி மீனாக்ஷி தன் செந்தாமரைக் கையால் தட்டி எழுப்பினாள். கருத்த மேனியும் பருத்த தொந்தியும் ஒற்றை ருத்திராக்ஷம் பொருந்திய மிடறுமுடைய உசபேச சாஸ்திரிகள் உடல் முழுவதையும் ஒருமுறை முறுக்கி, பெரும் கொட்டையிட்டு "என்னடி! தலை போகிற காரியம்போல் காலை எழு மணிக்கே எழுப்பி விட்டாயே! உனக்குப் புத்தி சித்தி இருக்கிறதா, இல்லையா? நானாக எழுந்திருக்கும் வரை எழுப்பாதே என்று எத்தனை தடவை கூறியும் உனக்கு அறிவில்லையே!', என்று கூறிக்கொண்டே மறுபடியும் நித்திரை செய்ய ஆரம்பித்தார்.

மீனாக்ஷி:—நாதா! தலை போகிற காரியமல்ல. தலையே போய்விட்டது. நம் செல்வக் குழந்தை ருக்மணியைக் காணோம். நான் தூங்கி எழுந்ததும் வழக்கம்போல் நேராக அவள் சயன அறைக்குச் சென்றேன். அங்கு அவளைக் காணாமற்போகவே வீடு முழுவதும் ஓரிடமும் பாக்கி யில்லாமல் நன்றாகத் தேடியாய் விட்டது. அவளை எங்கும் காணோம்.

சபேச சாஸ்திரிகள்:—போடி பைத்தியமே! குழந்தை எங்கே போய் விடுவாள்? வெளியே போயிருப்பாள். அல்லது தோழிகளுடன் உலாவுவதற்காகத் தோட்டத்திற்குள் சென்றிருப்பாள்.

மீனாக்ஷி : —இல்லையே. தோட்டம் முழுவதும் தேடியாய் விட்டது. ஒருவரையும் காணோம்.

ச. சா:—என்னைத் தொந்திரவு செய்யாதே. இன்னும் சிறிதுநேரம் பொறுத்துப் பார்ப்போம். எங்கிருந்தாவது வந்து விடுவாள்.

2

சபேச சாஸ்திரிகள் டிப்டி கலெக்டராபீசில் தலைமைக் குமாஸ்தா உத்தியோகம் வகித்து உபகாரச் சம்பளம் பெறுபவர். தான் உபகாரச்சம்பளம் பெற ஆரம்பித்ததே தன் வாழ்நாட்களை வைதிக மார்க்கத்தில் கழிக்க எண்ணங்கொண்டு முதலாவதாகக் கழுத்தில் ஒற்றை ருத்திராக்ஷம் பூண்டார். காலை எட்டுமணி சுமாருக்குக் கண்டிப்பாக எழுந்து விடுவார். எழுந்ததும் காப்பி யருந்துவது முதலாவது வேலை. பிறகு பல் துலக்கி ஸ்நானம் செய்து பூஜை செய்துவிட்டு சுமார் 10-மணிக்குத்தான் போஜனம் அருந்துவார். சாப்பாடு முடிந்ததும் தாம்பூலம் தரித்துத் தனது சாய்வான நாற்காலியில் மான்தோலை விரித்து அதில் சாய்ந்து கொண்டே பெஸண்ட் அம்மையாரின்

பகவத்கீதை முதலான நூல்களைச் சுமார் 2½ மணி வரை படித்துக் கொண்டிருப்பார். பிறகு சிற்றுண்டிகொண்டு மாலை 4-மணி வரை பத்திரிகை படிப்பார். பின்னர் சுமார் 8 மணிவரை சங்கங்களுக்குச் சென்று தனது நேரத்தைச் சீட்டாட்டத்தில் உல்லாசமாகச் செலவிடுவார். வைதீகத்திற்குச் சீட்டாட்டம் அடுத்ததில்லை என்று யாராவது கூறினால், "சூட்டை ராமாயண பாராயணம்" என்றும், "அமெரிக்கன் மகாபாரதம்' என்றும் அதைக் கைக்கொள்ளுதல் மிகவும் அவசியம் என்றும் தீவிரமாக வாதாடுவார்.

இன்னவாறு தர்ம பத்தினியே மீனாக்ஷி அம்மாள். முன்னோர் செய்த தவப்பயனால் அவ்வம்மையார் ஈன்றெடுத்ததே ஒரு பெண்குழவி—ருக்மணி தங்கள் அருந்தவப்புதல்வி ருக்மணியை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வருங்கால், மீனாக்ஷியின் விருப்பத்திற் கிணங்க, அவளது ஐந்தாவது வயதிலேயே அவளை கோபாலன் எனும் செல்வக்குமாரனுக்கு விவாஹம் செய்து வைத்தனர். அந்தோ! விதியிருந்தவா றென்னே! பெற்றோர் மனம் பதை பதைக்க கோபாலன் எனும் பாலன் பள்ளியினின்றும் இல்லம் செல்லுங்கால் கொழுத்த காளை யொன்று கூரிய கொம்பினால் குத்தித்தள்ள, ஊனுடல் நீக்கி வானுல கேகினன். சாஸ்திரிகளும் மீனாக்ஷியும் அடைந்த துக்கத்துக்கோ அளவில்லை. குழந்தை ருக்மணியோ எதுமறியாளாய் வாயிலிற் சென்று பாலருடன் கூடி ஆடிப் பாடிக்கொண்டிருந்தாள்.

நாள்கள் சென்று மாதங்க ளாயின. மாதங்கள் வருடங்க ளாயின. சபேச சாஸ்திரிகளும் மீனாக்ஷியும் தங்கள் குழந்தையின் கல்வி யறிவைக்கண்டு களி கூர்ந்தார்கள். எனினும் அவள் தன் விளைப்பயனை எண்ணுங்கால் இடியோசை கேட்ட நாகமேபோல் உளம் நலிவர். ருக்மணியும் கல்வி கேள்விகளிற் சிறந்து பதினறு பிராயமுடைய மங்கையாய்த் திகழ்ந்தாள்.

அவளது சுந்தர வதனமும், செவ்விதழ் அதரமும் தாமரைக் கைகளும் கொடியிடை மேனியும் முத்தெனும் பற்களும் கார்முகிலெனும் கூந்தலும், மதனவிற் புருவமும் வாளொத்த விழிகளும், இளம் புன்முறுவலும், அன்ன நடையும் அரையிற் பட்டாடையும் காண்போர் மனத்தைக் கவராமற் போகா. மங்கையும் தான் வெளியிற் செல்வது பேச்சுக் கிடமாகுமெனக் கருதி வீட்டைவிட்டு வெளியேறுவதே கிடையாது. தான் ஓர் விதவையென்பதையும் பெண்பாலோர் அனுபவிக்கும் சிறிதளவு சுதந்திரமும் கூடத் தனக்குக் கிடையாது என்பதையும் எண்ணுந்தோறும் மங்கை மனம் ஏங்கினள், நெஞ்சம் புழுங்கினள். சிந்தை யழுந்தினள். ஜோடி ஜோடியாக ஆனந்தக் கூத்தாடும் புள்ளினங்களைக்கண்டு பெருமூச் செறிவாள். "ஹா! என்னே ஹிந்து சமூகக் கொடுமை! உலகை யறியாக் குழவிகட்கு மணவினை முடித்தலும், பின் மாங்கல்ய மிழந்தாளென்று ஆயுள் முடிய அறையில் தாளிட்டு அடிமையாக்கும் கொடிய முறைமையும் என்றே நீங்கும்! உலகின் பயனை உணர வியலா இவ்வுடல் இருந்தென்ன பயன்? ஏன் இதை மாய்க்கொணாது? என் பெற்றோர்களுக்கு என்னைத் தவிர வேறு குழந்தைக ளில்லையே! அவர்களுக்காகவேனும் உயிர் தரிப்போம். ஆயினும், என் தந்தையும் என் மனத்துயரை யறிந்து மறுமணம் முடிக்க முயலாமல் வாளா விருக்கிறாரே! என் வாணாளெல்லாம் வீணாகவோ? ஈசா! கூடலம்பதிவாழ் சுந்தரேசா! மாந்தர்க்கருளும் மாண்புடை மஹேசா! உன் சித்தமிரங்கி என் வருத்தம் தீராயோ?" என்று புலம்பிய வண்ணமாய் தன் மஞ்சத்தின் மீது சாய்ந்தாள் ஓர் இரவு.

மகம்மதியர்களுக்கு முக்கியமானதொரு புண்ணிய ஸ்தலம் தென்னிந்தியாவில் உளது. அதுவே நாகூர் என்பது. ஆண்டு எளியதோர் குடியிற் பிறந்து சிறு வயதிலேயே தந்தையை யிழந்து உண்ண உணவிற்கும் அவதிப்பட்டு வந்தான் ஆதம்ஷா எனும் ஓ இளைஞன். ஓர்

தையற்காரனிடம் பணியாளாயிருந்து, தனக்குக் கூலியாகக் கிடைக்கும் மாதம் 8 ரூபாயில் தாயும் தநயனுமாகச் செட்டும் சிருமாய்க் காலங்கழித்து வந்தனர். சுமார் மூன்றாண்டுகளுக் குள்ளேயே ஆதம்ஷா குழந்தைகள் சட்டை முதல் உயரிய உத்தியோகஸ்தரின் உடைகள் வரை தைப்பதில் தனக்கிணையில்லை எனப் புகழ்பெற்று விட்டாள். புகழ்பெறவே வருவாயும் சிறிது உயரலாயிற்று. மாதம் ரூ. 151- வரை கிடைத்தது. அக்காலத்திலும் அவன் தாய் சொற்பச் செலவிலேயே குடும்பத்தை நடத்திச் சிறிது பணம் சேமிக்க ஆரம்பித்தாள். நமது கதை தொடங்கும் சமயம் ஆதம்ஷா சுமார் இருபது வயதடைந்த ஓர் இளங்காளை. தாய் சேமித்து வைத்திருந்த சிறிது பணத்தைக்கொண்டு ஓர் "சிங்கர் (Singer)" யந்திரம் வாங்கியாய்விட்டது. தாயோ மரணவேதனைப்படுகிறாள். தாயைத் தனித்து விட்டேக மனமில்லானாய் தனது தையல் யந்திரத்தைத் தன் வீட்டிலேயே வைத்துக்கொண்டு அங்கேயே வேலைசெய்து வாயத்தனித்தான். பல நாட்களாய் கடைக்குப் போகாததால் வருவாய் குறைய வாரம்பித்தது. அவனது புகழைக் கண்டு அழுக்காறு கொண்ட கயவர் சிலர் அவன் மிக்க கடனாளியாய் விட்டானென்றும் ஆகையால் கடன்காரர்களுக்குப் பயந்து தன் வீட்டை விட்டு வெளியேறாமலிருக்கிறானென்றும், கடன்காரர்கள் கூடிய சீக்கிரத்தில் ஜப்திக்கு வந்துவிடுவார்களாதலால் அவனிடம் துணி முதலிய எதுவும் கொடுக்கக் கூடாதென்றும் பல பொய் மொழிகளைப் பரப்பினர். அவை யனைத்தும் அறிந்தான். எனினும் ஆதம்ஷா தன் தாயின் கடைசி நாட்களில் அவளுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைச் சிறிதும் பழுதின்றிச் செய்தனன். சுமார் 10 நாட்களில் அவனது தாயும் அல்லாவை எண்ணினள்.

தன் தாயையும் பறிகொடுத்து யாரார் தயவையுமிழந்து ஆண்டுத் தனித்து வாழ மனமில்லாதவனாய் ஆதம்ஷா த... வீட்டிலுள்ள சாமான்களையெல்லாம் ... றுக்காசாகமாற்றி முதுகில் 'சிங்கர்' பெ... னும் தனது பையுள் நூறு ரூபா... கொண்டு தன்னூரைவிட்டு மதுரையம்... நண்ணினன். தனது பெயரும் திறம... யாரார் அறியவேண்டி, முதலிலேயே ... கடையமைத்தல் விடுத்து, முதுகில் மெஷினுடன் தெருத்தெருவாய்ச் சென்று வேலை கொடுப்போர் வீட்டு வாயிலிலேயே நின்று வேலையைச் செய்து கொடுத்துக் கூலி பெற்று வருவானாயினன். இங்ஙனம்

வரும் வாலிபனை ஓர்நாள் சபேச சாஸ்திரிகள் கண்டார். அவன் திறமையை மெச்சினர். தன் இல்லத்திற்கு அவனை இட்டு வந்து தனக்கும் பத்தினிக்கும் ருக்மணிக்குமாக சுமார் இருபது உடைகள் வரை தைக்க உத்திரவிட்டார். ஆதம்ஷாவும் தன் வேலையில் கண்ணும் கருத்துமாயிருந்து சிக்கிரமாகவே, நன்ருகவே ஆடைகளைத் தைத்து வரலாயினன். சபேச சாஸ்திரிகள் கொடுத்த வேலை முழுதும் செய்து முடிக்க சுமார் நாலைந்து நாள் பிடிக்குமாதலால் உண்ணும் நேரம் தவிர மற்றைய வேளையில் அவர் வீட்டு வெளித்திண்ணையிலேயேயிருந்து தன் வேலையைச்செய்வதும் இரவில் அங்கேயே துயில்வதுமாய் இருந்து வந்தான். சாஸ்திரிகளின் உடை நயத்தைக்கண்ட அவர் நண்பர் பலரும் ஆதம்ஷாவிற்கு வேலை கொடுத்து வந்தனர். இன்னணம் நாட்கள் பல செல்ல, "ஆதம்ஷா சாஸ்திரிகள் இல்லத்திலேயே தனது வீடு, கடை இரண்டும் அமைத்துக் கொண்டான்" எனும்

படி அங்கேயே நிலையாகத் தங்கிவிட்டான்.

4

வருவாய் மிகவே ஆதம்ஷாவிற்கு இன்பத்தில் கவனஞ் சென்றது. எனினும் அவனது தூய மனம் விவாஹத்தையே நாடிற்று. "வீடு, நிலம் ஏது மில்லா ஒரு அந்நிய நாட்டானுக்கு எவனே தன் பெண்ணை விவாஹம் முடிக்க முயல்வான்?" என அவனது மனம் அல்லும் பகலும் அனவரதமும் இல்லற இன்பத்தை நாடி ஏக்கமுற்று நின்றது.

ருக்மணியோ, தன் குலாசாரத்தை வெறுத்து, தன் தலைவிதியை நொந்து, உயிரையும் மதியாளாய் இருந்து வந்தாள். பகலெல்லாம் மனமழுந்தி இரவெலாம் புலம்பி ஏங்கி நிற்பாள்.

நாட்கள் பல செல்ல ருக்மணியின் விதிப்பயனை யறிந்த ஆதம்ஷாவிற்கு அவள்பால் இரக்கமும், ஆதம்ஷாவின் ஆசையை யுன்னி ருக்மணிக்கு அவன்பால் அனுதாபமும் வளர்பிறை மதியமே போல் வளர்ந்து வந்தது. வீட்டு வேலை ஏதுமில்லாச் செல்வக்குழந்தை யாதலால் பகல் பொழுதில் பெரும்பாகத்தைக் தையல்காரனுடன் பேசிக் கொண்டே போக்கு வாளாயினள் ருக்மணி மாது.

5

மணி எட்டாயிற்று. ஒன்பதும் ஆயிற்று. ருக்மணி வரக்காணேம். அருந்தவக்குழந்தையைக் காணப்பெருது போலீசாருக்குத் தகவல் கொடுத்து ஊர் முழுதும் தேடுவதற்கும் ஆள்கள் நியமித்தார். ஆதம்ஷாவையும் காணுததால் அவளது சொந்த ஊராகிய நாகூருக்கும் தனது நண்பர்களில் ஒருவரை யனுப்பிக் கூட்டிவரச் சொன்னர். இரவு பத்துமணி சுமாருக்கு ஆட்களெல்லாம் திரும்பி வந்து இருவரையும் காணவில்லை என உரைத்தனர். சபேச சாஸ்திரிகள் யாது செய்வதென்று அறியாதவராய் அன்றிரவு முழுதும் உறக்கமின்றிக் கழித்தனர். மறுநாள் காலை மறுபடியும் சுற்றுப் பக்கங்களெல்லாம் தேடிவர வேலையாட்கள் விரைந்தோடினர்.

காலை மணி 10-12 சபேச சாஸ்திரிகள் வீட்டு வாயிலில் சிவப்பு வர்ணம் தீட்டப்பெற்ற ஓர் துவிச்சக்கர வண்டியில் ஒரு வாலிபன் காக்கிநிற உடையணிந்தவனாய் கீழே யிறங்கி, சாஸ்திரிகள் கையில் ஓர் கவரை கொடுத்துச் சென்ருன். வாலிபன் சென்றதே உறையைக் கிழித்து உள்ளிருக்கும் தந்தியை ஆவலுடன் பிரித்துப் பார்த்தார். அஃது மந்திரகிரி யின்றும் வந்திருந்தது.

"ஆதம்ஷா—ருக்மணி மணம் முடிந்தது. விரும்பினல் பார்க்க வரலாம்—முருகேச முதலியார், காங்கிரஸ் காரியதரிசி, மந்திரகிரி" என்றிருந்தது.

கடிதத்தைக் கண்டதும் மனம் கவன்ருர். செய்வ தறியாமல் தவித்தார். கடைசியில் ஒருமுறை பார்த்துவிட்டுப் போவதாக நிச்சயித்து மந்திரகிரி வந்து சேர்ந்தார். தன் செல்வக்குமரி என்பதையும் மறந்து ருக்மணியைத் திட்டாததெல்லாம் திட்டினர். ஆதம் ஷாவை வாயில் வந்தபடி யெல்லாம் வைதார். "இனி உங்கள் முகத்தில் விழிப்பதில்லை"

என்று கூறி வெளியே வந்து முருகேச முதலியாரைத் தனியா யழைத்து முழு விவரமும் வேண்டினர்.

முருகேச முதலியார்:—"நேற்று காலை எட்டேகால்மணி ரயிலில் இருவரும் வந்தார்கள். இங்கு வந்து ஓர் சத்திரத்

தில் தங்கி யிருந்து இரவு 10-மணிக்குமேல் ஓர் மகமதியர் வீட்டிற்சென்று மண முடித்து சுமார் 1-மணிக்கெல்லாம் திரும்பினார்கள். நான் தற்செயலாய் அவ்வழி செல்ல நேர்ந்தவன் அவர்களைக்கண்டு அதிசயித்து உண்மையை உரைக்கும்படி கேட்டதில் எல்லா விருத்தாந்தத்தையும் எடுத்துரைத்தனர். ருக்மணிக்கு மறுமணம் செய்யாதது உங்கள் குற்றமே. அதன் பயனை இப்பொழுது அனுபவித்தீர்கள். அவர்கள் இங்கேயே தங்கி இல்லற தர்மத்தை நடத்தட்டும். நீங்கள் அவர்களை வெறுப்பது நீதியல்ல. காதல் தெய்விகத் தன்மை பொருந்தியது. அது ஜாதிமத வேறுபாடு பார்ப்பதில்லை. ஆகையால் தாங்கள் அவர்களை இவ்வூரிலேயே வசிக்கச்செய்து அவர்களையும் காப்பாற்றி வருவதே தகுதியாகும்."

சபேச சாஸ்திரிகளும் நற்புத்தி பெற்றவராய் முருகேச முதலியார் கூறியதை ஒப்புக்கொண்டு மாதாமாதம் "ருக்ஷா"வின் செலவிற்காக நூறு ரூபாய் அனுப்பி வருவாராயினர். தம்பதிகள் இருவரும் வாழ்நாளை இன்பமாகக் கழித்து வந்தனர்.

வேலைக்காரன்:—"எஜமான் கிண்டிக்கு வண்டியில் போயிருக்கிறார்."

பார்க்க வந்தவர்:—"அவர் கிண்டியிலிருந்து வந்தபின் உண்டிக்கடைப் பக்கத்திலிருக்கும் மண்டிக்கடை முதலாளி கண்டிப்பாய் பணம் கேட்டுப் போகிறானென்று சொல்."

மாதர் கடமைக் கும்மி

(சூரியூர்-வ. பதுமநாப பிள்ளை.)

கும்மியடி பெண்ணே! கும்மியடி சிந்தை
      குளிர்ந்து மகிழ்ந்து கும்மியடி!
நம்மன்னை பாரத தேவி நலத்தினை
      நாடிக் கும்மி அடித்திடடி! 1.

செல்வத் திறைவி திருமகளாம்; இந்த
      செவ்விய மேதினி பூமகளாம்;
பல்விதமாகிய சக்திக்(கு) உரியவள்
      பார்வதி; போர்மகள் துர்க்கையடி! 2.

தேவியரின்றி எத் தேவர்க ளேனும்
      திருவருள் செய்வரோ? பூமியிலே
ஆவியனையவர் பெண்மணிகள்; அவர்க்(கு)
      ஆடவர் தேகத்தை ஒத்தவராம். 3.

'இல்லதென் இல்லவள் மாண்பானால்?' என
      ஈறில் புகழ் திருவள்ளுவரே,
சொல்லிய உண்மை உணர்ந்தால் பின்னொரு
      சோகம் விளையுமோ வாழ்க்கையிலே. 4.

மாண்ட கணவனை மீண்(டு) உயிர்ப்பித்த நன்
      மாது சாவித்திரி; திங்கள் பத்தும்
ஈண்டிய துன்பத்திடை வனத்திற் சிறை
      இருந்த அருந்தவ ஜானகியார்; 5.

மூர்த்திகள் மூவரை பாலர்க ளாக்கிய
      முனி மனையவள் அனுசூயா;
பார்த்திபர் ஐவர் மனமகிழ் வீரநற்
      பாஞ்சாலி; சத்தியபாமா. 6.

முதலிய மாதர் திலகங்கள் பலர்
      முன்னர் விளங்கிய இந்நாட்டில்,
பதவியும் பட்டமுமே பெற விழை
      பாவையரே மலிந்தார் இந்நாள்! 7.

ஏட்டுக்கல்வி கற்(று) அடிமைத் தொழிலுக்கே
      ஏங்கி நிற்கின்றார் இளைஞர் பலர்;
நாட்டின் முன்னேற்றத்தை நாடி உழைத்திடும்
      நல்ல தொண்டர்கள் சிலர் தாமே! 8.

ஆடவர் ஏங்குதல் போதாவோ? இனி
      அணங்குகளும் ஏங்க வேண்டுங்கொலோ?

மூடத்தனம் புற நாகரீகத் திலே
    மோகங் கொண்டு குலவுவதே ! 9.

உயர்தரக் கல்வி சிலமங்கைகள் பெற்று
    உத்தி யோகங்களில் வீற்றிருந்தால்,
பயனென்னவோ ? அதனால் இங்கு வாடும்பல்
    பாவையர் துன்பங்கள் நீங்கிடுமோ ? 10.

உயிர்க்(கு) உறுதி செயும் உண்மைப்பொருளை
    உணர்த்துவதே மெய்க் கல்வியடி ;
அயிர்த்திட லின்றியே நற்கலைச் செல்வத்தை
    அனுபவிப்பது அதன் பயனாம். 11.

அத்தகை மெய்க்கல்வி தன்னையே மங்கையர்
    ஆவலொடுங் கற்க வேண்டுமடி;
எத்தகை நிலையி லிருந்தாலும் மனத்
    திற் பரோபகாரம வேண்டும். 12.

சின்னஞ்சிறு குழந்தைகளைப் பலர் இத்
    தேசத்திற் 'கல்யாணம்' செய்விக்கிறார்;
பின்னுறுந் துன்பம் உணர்வாரோ ? அவர்
    பேதைமை உன்னவும் கூசுதடி ! 13.

மிக்க இளமையில் மங்கல நாண்அற
    'விதவை' எனப் பெயர் சூட்டிவிட்டே
மக்கள் அவரை விலங்குகள் போலவே
    மதித்து நடத்தல் பெருங் கொடுமை ! 14.

சீரிய கல்வி அறிவின்மையால் பலர்
    சேர்ந்(து) உரையாடுவர் வம்புகளே;
பாரினில் ஏனைய மாதர் முன்னேறவும்,
    பாரத மாதர் பின்னோக்கு கின்றார் ! 15.

உண்டும் உடுத்தும் உறங்கியுமே நாளும்
    உகந்திடலின்றிப் பிறி(து) அறியார்;
கண்டிலர் வாழ்க்கையின் சீரிய நோக்கத்தை;
    கருதிலர் ஆருயிர்க்(கு)உறுதியையே ! 16.

ஆடவர் அன்னிய நாகரீகத் தினில்
    ஆர்வம்கொண்டே அலைந்தாலும்,
பீடுடை மங்கையர் பண்டை நாகரிகம்
    பேணிலராயின், இன்(று) என்னாகும் ? 17.

'மாதரார் கற்பினில் நின்ற வையம்' என்பர்
    மா கவி கம்பரும்; மங்கையர் தம்
ஓதருங் கற்பினா லன்றோ இன்றும் இவ்
    வுத்தம பாரதம் ஓங்குவதே ! 18.

வீரமும் தொண்டும் மெய்க்கல்வியும் ஞானமும்
    வேற்றுமையின்றி இரு பாலார்க்கும்

ஆர்வமொடும் பெறத் தக்கனவே! அவை
    ஆடவர்க்கேயல; மாதர்க்குமே! 19.

கண்ணகி வீரத்தை—கோதையின் ஞானத்தை—
    காரிகை மங்கம்மை ஆட்சியினை—
எண்ணரிய தமிழ் மங்கையர் கல்வியை,
    என்னென்று சொல்லிப் புகழ்வதடீ? 20.

செந்தமிழ் நாட்டினில் மாதர்கள் பேதமை
    சேர்ந்திருப்ப(து) எவர் குற்றம்?
அந்தகர் போலும் அவரை அடக்கி ஆள்
    ஆடவர் தங்களின் குற்றமன்றோ! 21.

பெண்ணுக்கு விடுதலை இல்லையெனில், இங்கு
    பேணும் 'சுய-ஆட்சி' கூடுவதோ?
மண்ணுக்(கு) இறைவியும் பூமகளே; அதை
    மறந்து பெண்ணை அடக்குவதோ? 22.

'சிறைகாக்கும் காப்பெவன் செய்யும்? மகளிர்தம்
    சீர்நிறை காத்தலே தலை' என்றார்—
மறைசெய்த வள்ளுவர்; சிந்தையிலே யொரு
    மாசிலதேல், அச்சம் கொள்வதும் என்? 23.

இந்திய மக்களின் நாகரீகத்திற்கும்
    இங்கிலாந்தாதிய வேற்று நாட்டுப்
பந்தம் மிகும் நாகரீகங்கட்கும் என்றும்
    பற்பலவும் பொருந்தா சிறிதும்! 24.

தற்காலம் மாதர் அயல் நாகரிகந்
    தழுவி நடப்பரேல், தமிழ்த்தாய் தன்
பொற்பை இழந்து குலைந்திடல் திண்ணமாம்;
    போத மகளிர் பணி இதுவோ? 25.

அம் மையல்விட்டு நன் மெய்க்கல்வி பெற்று
    ஆருயிர்க் கெல்லாம் மெய்யன்பு கொண்டு,
செம்மை பெறப் பழம்புகழை உயிர்ப்பித்தல்
    சீரிய நாரியர் செய் கடனே! 26.

நானிலம் முற்றும் ஓர்நாடக மேடையாம்;
    நாரியரும் பல ஆடவரும்,
ஊனில் உயிர் இருந்து ஆட்டிட ஆடுவர்;
    உண்மையில் நாடக பாத்திரரே' 27.

மங்கையர் நன்கு திருந்தி பணிசெய
    வாழ்க்கை சிறந்து நலம் பெறுமே!
செங்கைகள் கொட்டிநல் அன்பு வளர்ந்திடச்
    செவ்விதிற் கும்மி அடித்திடடீ! 28.

‘மஸால்வடைக்காரன்’

(வி. ஆர். பாஷியம்.)

“முறுக்கு, மஸால்வடை, சுண்டல்” என்ற குரல் தெருக் கோடியிலிருந்து வர ஆரம்பித்தது. க்ஷணமே ஒவ்வொரு வீட்டிலிருந்தும் புற்றீசல் போல் 2 அல்லது 3 குழந்தைகள் வெளியே வர ஆரம்பித்தன. எங்கும் “ஓய் மஸால்வடைக்காரா” என்ற கூச்சல் கிளம்பியிருந்தது. அப்பொழுது ஓர் அழுக்கடைந்த ஆடையை உடுத்திய அவலக்ஷணமுள்ள அந்த மஸால்வடைக்காரன் ஒரு வீட்டுத் திண்ணைமேல் தனது தட்டை இறக்கினன். உடனே அக் குழந்தைகளில் பலர் அவன் மேலும் அவன் தட்டின் மேலும் விழுந்து இஷ்டப்படி மஸால்வடை முறுக்கு முதலியவைகளை எடுத்துக் கொண்டார்கள். மஸால் வடைக்காரனும் சாவதானமாக புன் சிரிப்புடன் அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். யாவரும் எடுத்துக் கொண்ட பிறகு “சரி, இப்பொ என்னென்னு எடுத்துக்கிட்டீங்க, எவ்வளவு காசு கொடுக்க போறீங்கோ” என்றான். சில குழந்தைகள் முன் வந்து “நான் 2 வடை நாலு முறுக்கு எடுத்துக் கிட்டேன்” “8 வடை எடுத்து கிட்டேன்” என்றெல்லாம் சொல்லி அவன் கையில் காசு கொடுத்தார்கள். சில குழந்தைகள் “காசுக்கு பெங்க அம்மாச்சியை கேளு” என்று சொல்லினர்.

அக் குழந்தைகளிலும் திருடர்கள் இல்லாமலில்லை. “என்னடா சுத்த மக்கு கா எவ்வளவு எடுத்து கிட்டாலும் அவனுக்கு நினைப்பு வாதில்லை” என்று பேசிக் கொள்ளும் குழந்தைகள் இவனிடம் எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பதைக் கூறவும் வேண்டுமோ! இத் தட்டைத் தூக்கி தன் தலைமேல் வைத்துக்கொண்டு வழி நடந்தான் மஸால்வடைக்காரன்.

* *

ஆரூரில் மூலையே மருந்துக்கும் இல்லாதவன் யாரென்றால் மொத்தன் என்று ஒரு சிறு குழந்தையும் சொல்லி விடும். அவனுடைய உண்மை பெயர் என்னவோ கடவுளுக்குத் தான் தெரியும். ஆனால் அவனை மொத்தன் என்றே கூப்பிட்டார்கள். சின்ன வராகபிள்ளை என்ற பணக்காரர் 15 வருஷங்களுக்கு முன் அக்கரைச் சீமையிலிருந்து அவனை யழைத்து வந்தார். 8 வருஷங்களுக்கு முன் அவர் இறந்த பொழுது ஆரூரில் இருந்த வீட்டை அவன் பெயரில் எழுதி வைத்துவிட்டு போனார். பிறகு மொத்தன் அவ் வீட்டிலிருந்து கொண்டு மஸால்வடை வியாபாரம் செய்ய ஆரம்பித்தான். அவ் வீட்டில் பெரும் பகுதியை மூத்தம்மாள் என்னும் கிழவிக்கும் அவள் மகளுக்கும் குடிக் கூலிக்கு விட்டு விட்டான். அதில் மூத்தம்மாள் ஒரு "ஓட்டல்" நடத்தி ஜீவனம் செய்து வந்தாள். மொத்தனுக்கு வியாபாரத்தில் ஏதோ கொஞ்சம் கிடைக்கும். அதோடு குடிக் கூலியையும் சேர்த்து மூத்தம்மாளிடம் கொடுத்து விட்டு அங்கேயே சாப்பிட்டு கொண்டிருந்தான். கருமை நிறமும், தடித்த உதடும், பொக்கை வாயும் எலும்புத் தோற்றமும் அவனுடைய அழகுச் சின்னங்கள். காலையி லெழுந்ததும் மஸால் வடை, முறுக்கு செய்வது, பிறகு அதைக் கொண்டுபோய் விற்று வருவது, பிறகு வீட்டுக்கு வந்ததும் படுத்து தூங்குவது அல்லது அங்காயியின் (மூத்தம்மாளின் மகள்) காட்டுப் பாட்டை கேட்டுக்கொண்டிருப்பது; இதுவே அவன் தினத் தொழிலாக இருந்தது. எதற்கும் அவனிடம் புன்சிரிப்புதான். அது எவ்வளவுதான் அசங்கியமா யிருந்தாலும் அதில் அமைதியும் அன்பும் வெளி வந்தது.

* * *

ஆமாம். ஒரு நாள் முழுவதும் மூத்தம்மாள் அதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தாள். மொத்தனுக்கு உற்றார் உறவினர் யாரும் இல்லை. அவன் பெயரிலோ ஒரு வீடு இருக்கிறது. அவன் இறந்தால் அது யாரைப் போய்ச் சேரும். ஒரு வேளை அதை ஊரார் சாவடியாக செய்தாலும் செய்து விடுவார்கள். ஏன் அவ்வீட்டை தன் பெயருக்கு எழுதிவைக்கும்படி கேட்கக்கூடாது? அது நியாயமில்லை. இல்லாபோனால் என் பெண்ணைக் கொடுத்து மருமகனாக்கிக்கொள்ளக் கூடாது. இந்த அருபிக்கா கொடுப்பது? இருந்தாலும் வாட்டை கொடுக்கவேண்டியதில்லை. அதுவுமல்லாமல் யாருக்காவது கடிதம் எழுத வேண்டுமானால் எழுதித்தருகிறான். தண்ணீர் கொண்டு வருகிறான். இன்னும் எவ்வளவோ காரியம் செய்கிறான். குணத்திலோ தங்கமானவன். என்ன செய்வது? எதற்கும் பெண்ணையே கேட்கலாம் என்ற எண்ணத்துடன் "அங்காயி, அங்கா" என்று கூப்பிட்டாள். உடனே "என்னாத்துக்கம்மா" என்று கேட்டுக் கொண்டே அங்கா வந்துசேர்ந்தாள். அங்காயிக்கு 18 வயது; நிறம் கொஞ்சம் கருமை; முகம் லக்ஷணம் பொருந்தியது. மிகவும் பத்தி

சர்லி. 'அங்காயி, நீ யாரை கட்டிக்க போறேன்னு யாராச்சியும் கேட்டா நீ என்னு சொல்லுவே" என்றாள். இக்கேள்வி கொஞ்சம் புதிசாய்த் தானிருந்தது. இதுவரையிலும் தன் தாயார் இப்படிக் கேட்டதில்லை. "என்னுத்துக்கு நான் ஐயாசாமியைத் தான் கட்டிப்பேன்" என்று சொல்லிவிட்டு தன் பதிலில் தானே வெட்கி உள்ளே போய் விட்டாள்.

ஆமாம்; முன்னமே சந்தேகப்பட்டாள். அது சரியாய் விட்டது. ஐயாசாமி ஓர் அயோக்கிய சிகாமணி. புது நாகரீகப்படி கிராப், கண்ணாடி, ஜவ்வாது பொட்டு சிகரெட் இதெல்லாம் அவனிடம் உண்டு. முன்னர் அவன் தகப்பனார் மளிகைக் கடையில் ஏதோ கொஞ்சம் சம்பாதித்திருந்தார். இப்பொழுது கைகொஞ்சம் சளைத்து விட்டது. அவனுக்கு அங்காயியின் பேரில் ஓர் கண். குளத்திற்கு தண்ணீர் எடுக்க வரும்பொழுது ஏதாவது வேண்டுமென்றே அவளோடு பேச ஆரம்பிப்பான். எப்பொழுதும் குடுமியையும் வெறுங் கண்களையும் பார்த்த அங்காயிக்கு இந்த புதுமையில் ஓர் பித்து ஏற்பட்டுவிட்டது. அதனால் அவனையே கலியாணம் செய்து கொள்ளவேண்டுமென்ற ஓர் ஆசை உண்டாய் விட்டது. அதைக் காதலென்று எப்படி சொல்ல முடியும்? ஐயாசாமிக்கு அவளைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று ஓர் எண்ணம். முத்தம்மாளிடம் கொஞ்சம் ரொக்கம் இருக்கிறது. அது அவளைத் தானே சேரும். அது தான் அவன் காதலின் அடிப்படை. அதுவும் அவனுடைய நிலைக்கு அப்பெண் கிடைத்தால் ஓர் அதிர்ஷ்டம் என்று நினைக்க வேண்டாமா?

"அந்தப் பிசாசிடம் பெண்ணைத் தள்ளுவதைவிட கிணற்றில் தள்ளலாம்" என்று நினைத்துக்

கொண்டு மறுபடியும் "அங்காயி" என்றழைத்தான். "என்னம்மா, சும்மா கலாட்டா பண்றே" என்று சொல்லிக்கொண்டே வந்தாள். "சரி, நம்ப மொத்தனை நீ கட்டிக்கணும்" என்றாள். அங்காயி மலைத்துவிட்டாள். இதை அவள் எதிர்பார்க்கவேயில்லை. என்ன செய்வது? தன் மனம் ஐயாசாமியின் பேரில் இருந்தது. ஆனால் தாயாரோ இப்படிச் சொல்கிறாள். தயங்குவதைக் கண்ட முத்தம்மாள் "நீ கட்டிக்கத்தான் வேண்டும்" என்றாள். தாயின் நட்பும் பசுப்போலிருக்கும் ஒருவனை கணவனாக அடைவதா அல்லது மனதுக் கேற்ற மணாளனை—ஒரு நிமிஷம் மனம் ஊஞ்சலாடியது. பிறகு ஒருவாறு மனதைக் திடப்படுத்திக் கொண்டு "சரி அம்மா, அப்படியே செய்துகிடறேன்" என்றாள். பாதிப் பதிலிலேயே துக்கமும் அழுகையும் நெஞ்சை அடைத்துக் கொண்டுவிட்டது. வருத்தத்துடன் சமயலறைக்குப் போய் விட்டாள்.

* * *

இரண்டு மாதத்திற்குப் பின் மொத்தனுக்கும் அங்காயிக்கும் கலியாணம் நடந்தது. மிகவும் சாதாரண கலியாணம். ஊரார் யாவரும் (ஐயாசாமியைத் தவிர) வந்திருந்தார்கள். ஐயாசாமிக்கு மிகவும் கோபம். ஒரு கைபார்த்து விடுவேன் என்று சப்தம் செய்தானும். ஒருநாள் சாயங்காலம் 5 மணியிருக்கும். குளத்தங்கரையில் அங்காயி நின்று கொண்டிருந்தாள். அப்பொழுது ஐயாசாமி அங்கு வந்து சேர்ந்தான். அங்காயி அவனுடன் பேசாமல் தண்ணீரைத் தலையில் எடுத்து வைத்துக் கொண்டு வழி நடந்தாள். "போ, போ புருசன் பெஞ்சாதியா வாழுறத்தே நான் பார்த்துக்கிறேன்" என்றான். ஒருநாள் மொத்தன் மலால் வடை விற்று விட்டு வருகையில் ஓர் சந்தில் ஐயாசாமி நின்று கொண்டிருந்தான். அவன் கையில் ஒரு பிச்வா கத்தியிருந்தது. அந்தப் பக்கத்தில் ஜன நடமாட்டமாயிருந்தது. அதனால் ஐயாசாமி தலை மறைவாய் போய் விட்டான். நான்கு ஐந்து நாட்கள் இதே மாதிரி நடந்து வந்தது. ஐயாசாமிக்கு மொத்தன் தன்னைக் கவனிக்கிறானென்று தெரியாது. ஒருநாள் மொத்தன் சந்தோஷமாக பாடிக் கொண்டே வந்தான். அவன் இதுவரையில் பாடினதை ஒருவரும் பார்த்ததில்லை. அச் சந்திற்கு வந்ததும் அங்கு ஜனநடமாட்டமேயில்லை. அப்பொழுது ஐயாசாமி மெதுவாக பூனை போல் வந்து கத்தியால் மொத்தன் முதுகில் குத்தி விட்டான். சத்தமேயில்லாமல் கீழே விழுந்தான் மொத்தன். கொஞ்சம் நேரத்தில் ஒரே கூட்டம். ஐயாசாமி தான் செய்திருப்பானென்று எல்லோருக்கும் பட்டவர்த்தனமாக விளங்கிவிட்டது. உடனே சிலர் ஐயாசாமியைக் கட்டிப் பிடித்துக் கொண்டு வந்தார்கள். அவன் பேசவேயில்லை. குற்றத்தை மறுக்க தைரியமேது? போலீஸாரும் வந்து சேர்ந்தார்கள். அங்காயியும் வந்து மிகவும் மனவருத்தத்துடன் அழுது கொண்டிருந்தாள். போலீஸ் இன்ஸ்பெக்டர் பிரேதத்தைச் சோதனை செய்தார். அப்பொழுது அந்த மொத்தன் பையிலிருந்து ஒரு கடிதம் எடுத்தார்கள். அதைப் பார்த்தவுடன் இன்ஸ்பெக்டர் ஆச்சரியத்தால் வாய் விட்டு கத்தினார். அதில் எழுதியிருந்தது பின்வருமாறு:-"கொஞ்சநாளாக இவ்வுலகத்தில் இருக்க எனக்கு விருப்பமில்லை. அதனால் நான் தற்கொலை செய்து கொள்ளுகிறேன்."

இதைப் பார்த்ததும் ஐயாசாமியை விட்டு விட்டார்கள். ஆனால் அவன் ஏன் அப்படி அழுதான் என்று ஒருவராலும் சொல்ல முடியவில்லை.

அன்று முதல் ஐயாசாமியை ஊரிலேயே காணவில்லை. அங்காயியையும் காணவில்லை. "சரி தான்; புருஷனை கொன்னூட்டு இன்னொருத்தனை புடிச்சிகிட்டு போயிட்டான்" என்றார் ஊரார்கள். ஆமாம்; காவிரியில் சென்ற ஒரு பெண்ணின் பிரேதத்தைப் பற்றியும் காசி சாமியாரைப் பற்றியும் அவர்களுக்கென்ன தெரியும்?

தேவவிலாசத்தில் கொலை

:(0):

(கே. ராஜகோபாலன், பி. ஏ.)

"தேவதாஸ் கொலை செய்யப்பட்டார். உடன் புறப்பட்டு வரவும்" என்று டெலிபோன் வந்ததும் போலீஸ் இன்ஸ்பெக்டர் வெங்கடேஸ்வான் சற்றும் திடுக்கிட்டவராகக் காணப்படவில்லை.

தேவதாஸ் ஒரு பெரிய தனவந்தர். வயது எழுபது. இளைத்த சரீரம். கோபம் நுனி மூக்கில் தானிருந்தது. சந்ததியில்லை. மனைவியும் இறந்து விட்டாள். ஜனங்களிடம்—ஏன்! தன் வீட்டில் வசிப்பவர்களிடமே—தயை தாட்சண்யமின்றி நடந்து வந்தார்.

வெங்கடேஸ்வானுக்கு இறந்தவரின் காரியஸ்தரைத் தெரியும். அவரைத்தான் முதலில் சந்தேகித்தார். நிதானமாக 'தேவவிலாஸை' அடைந்ததும் காரியஸ்தரைக் கண்டார்.

"கொலை எங்கே நடந்தது ?"

"தோட்டத்தில்" என்று அமைதியாகக் கூறி அவ்விடத்திற்கே அழைத்துச் சென்று ஒரு நீளமான துணியால் ஓர் ஆலமரக்கிளையில் தொங்கிக் கொண்டிருப்பதைக் காண்பித்தார் காரியஸ்தர்.

"இந்த மரம் தோட்டத்தில் எவ்வளவு நாட்களாயிருக்கிறது ?"

"எனக்குத் தெரியாது ; அதைக் கவனிக்க வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை"

"நடந்தது என்ன ?"

"நாங்கள் நாலு பேர் பந்து விளையாடிக் கொண்டிருந்தோம். தோட்டத்திற்குள் பந்து விழுந்தது. அதைத் தேட முயற்சித்த பொழுது தான் இவரைப் பார்வையிட்டேன். உடனே மற்றவர்களையும் அழைத்து வந்து காண்பித்தேன். இங்கே தான் அவர்களிருக்கிறார்கள்" என்று கூறி இரண்டு யுவதிகளும் ஒரு இளைஞரும் இருந்த இடத்தைக் காண்பித்து இன்ஸ்பெக்டரை அழைத்துச் சென்றார் காரியஸ்தர்.

"காரியஸ்தன் கூறுவது உண்மைதானா ?" என்று வினவினர் வெங்கடேஸ்வான்.

"ஆம்" என்ற பதில் மூவர் வாயினின்றும் வந்தது.

"உயிர் போய் விட்டதோ என்னவோ" என்று கூறி வெங்கடேஸ்வான் அங்கு மீண்டும் சென்று பார்த்தார். தேவதாஸ் இறந்து தான் கிடந்தார். நால்வரும் ஒரு மிக்க, "ஒரு பார்வையிலேயே உயிர் போய் விட்டதென்று கண்டு கொண்டோம். தாங்கள் வரும் வரையும் முன் போலவே விளையாடிக் கொண்டிருக்கப் பிரயத்தனப் பட்டோம்" என்றார்கள்.

வெங்கடேஸ்வான் வீட்டைப் பரிசோதிக்க எண்ணி அவர்களை அழைத்துச் சென்றார். வீட்டில் உள்ள மற்றவர்களும் அழைக்கப் பட்டனர். அவர்களனைவருக்கும் தேவதாஸ் மேல் ஆத்திரமிருந்தது. காரியஸ்தரை வேலையிலிருந்து நீக்கி விடுவதாகப் பயமுறுத்தியிருந்தார் ; மருமகள் சொத்தை அபகரிக்க யத்தனித்தார் ; ஒன்று விட்ட சகோதரியை வாயில் வந்தபடி திட்டியிருந்தனர் ; பரிசாரகனை ஒன்றுக்கும் உதவாதவன் என்று கேலி பண்

ணியிருந்தார்; வீட்டுப் பணிப் பெண்களைக் குரூரமாக நடத்திவந்தார்.

இன்ஸ்பெக்டர் இந்தக் கேஸைக் கண்டு பிடிக்கத் துப்பறியும் கோவிந்தனே தகுதி யென்றெண்ணி அவருக்குத் தந்தி கொடுத்தான். பிரேதத்தை எடுக்கச் சொல்லி விட்டு அவ் விடத்தைப் பழைய படியும் ஒரு தரம் சுற்றிப் பார்த்து விட்டுச் சென்றார்.

2

கோவிந்தன் நல்ல படிப்பாளி. பருத்த சரீரம்; சிரித்த முகம்; பிச்சம் பிச்சமாகத் தொங்கும் தலைமயிர்கள். அவரை ஒரு தரம் பார்த்தவர் அடையாளம் கண்டு கொள்வது கூடப் பிரயாசம். தந்தி வந்ததும் தன் சாமான்களை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்.

தேவதாஸ் கொலை
செய்யப் பட்டார்

வீட்டுக் காரர்கள்
மேல் சந்தேகம்

என்ற பகுதியைப் பத்திரிகையில் படித்தார். இது தான் ஐம்பதாவது கேஸ். 49 கேஸ்களில் உண்மையை நிலை நாட்டி விட்டார்; அதற்காக பரிசும் பெற்றிருந்தார்.

இன்ஸ்பெக்டரைக் கண்டதும் அவருடன் 'தேவவிலாஸ'த்திற்குச் சென்றார்.

"இந்த வீட்டு ஆட்களைப் பற்றி எனக்கு இன்னும் தெளிவாகக் கூறு. அவர்கள் எப்படி இருந்தனர்."

"களங்கமில்லாமல் தான் காணப் பட்டனர். ஒவ்வொருவரும் இச் சம்பவத்தால் பாதிக்கப் பட்டவர்களாகத் தெரியவில்லை. இறந்தவரின் மருமகள் எதிரிலுள்ள குளத்தில் தனியாக ஒரு படகில் சென்று கொண்டிருந்தாள்."

கோவிந்தனின் முகத்தில் ஒருவிதப் பிரகாசம் தோன்றியது. "தனியாகவா?" என்று கேட்டார்.

"ஆம், ஆனல் பந்து விளையாடிக் கொண்டிருந்தவர்கள் அவளைப் பார்க்கலாம். அவளும் அவர்களைப் பார்க்கலாம்."

"இருக்கட்டும். கொலை நடந்த இடத்திற்குப் போவோம்" என்று கூறி விட்டு இன்ஸ்பெக்டருடன் அங்கு வந்து சேர்ந்தார். பூமி முழுமையும் கோவிந்தன் பூதக் கண்ணுடியால் சோதித்தார். கிழவர் தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு பிரயத்தனமும் செய்ததாகக் காண வில்லை.

"பிரேதம் எப்படித் தொங்கிக் கொண்டிருந்தது?" என்று கேட்டார் கோவிந்தன்.

இன்ஸ்பெக்டர் கோவிந்தன் கழுத்தில் இரண்டு மூன்று தரம் கயிற்றைச் சுற்றி அவரைத் தூக்கிக்கொண்டே காண் பித்தார். வெங்கடேஸ்வானுக்குத் தான் பார்வையிட்டதை அப்படியே நடப்பது போல் காட்டுவதில் மிகுந்த சாமர்த்திய முண்டு.

"என்னை விட்டு விடாதே" என்று பயத்துடன் கூறினர் துப்பறியும் நிபுணர்.

"இல்லை" என்ருர் இன்பெக்டர்.

"ஒவ்வொரு இடத்திலிருந்தும் மரத்தைப் படம் பிடித்தாய் விட்டதா?"

"ஆம்."

"ஏதாவது காலடித்தட மிருந்ததா?"

"இல்லை. இலைகளைத் தவிர வேறென்று மில்லை"

பிறகு அவர்கள் தோட்டத்தைச் சுற்றி வந்து கொலை நடந்ததின் காரணத்தைப் பல வாறு யோசித்தார்கள். வீட்டி லுள்ளவர்கள் ஒரு சமயம் மிகுந்த வருத்தத்துடனும் மற்றொரு சமயம் சற்றுச் சந்தோஷத் துடனு மிருப்பதைக் கண்டனர்.

3

கோவிந்தன் 'தேவவிலாஸ'த் திற்குப் பன்னிரண்டு மைல் தூரத்தில் ஒரு விளையாட்டு விளை யாடலாம் என்று வீட்டு ஆட் களுக்குத் தெரியப்படுத்தினன். அவர்களும் இதற்குச் சம்மதித் தனர்.

விளையாட்டை ஆரம்பித் தாய்விட்டது. ஜனங்க ளெல் லோரும் அதில் மிகவும் ஈடுபட் டிருந்தனர். திடீரென்று கோவிந்தன் "என்னை மன்னியுங் கள்; ஒரு சாமானை மறந்து வந்து விட்டேன்" என்று கூறிக் கொண்டே ஒரு காரில் ஏறி விரைந்து சென்ருர்.

ஒரு மணி நேரம் கழித்த பிறகு திரும்பி வந்து மோகன

ராகத்தில் காலைக்து பாட்டுகள் பாடி அவர்களை மகிழ்வித்தான். வீட்டுக்குச் செல்லும் பொழுது "நாளைக் காலை பத்தரை மணிக்கு உன்னைத் தோட்டத்தில் பார்க்க விரும்புகிறேன். மறந்து விடாதே" என்று இன்ஸ்பெக்டரிடம் கூறினர்.

அவரும் அதைத் தன் கைப் புத்தகத்தில் குறித்துக் கொண்டார்.

4

ஆலமரத்தடியில் வந்ததும் துப்பறியும் நிபுணர்,

"நான் நேற்றுத் திடீரென வந்ததை பற்றி ஆச்சரியப் படுகிறீர், என்ன?" என்ருர்.

"நானும் சந்தேகித்தேன்" என்ருர் இன்ஸ்பெக்டர்.

கோவிந்தன் வேருென்றும் கூருமல் சருகுகளைத் தள்ளினர். அங்கு பெரியதும் சிறியதுமான காலடிகள் காணப்பட்டன.

"இதிலிருந்து என்ன கண்டீர்?" என்ருர் இன்ஸ்பெக்டர்.

"அங்கிருந்து வந்து இப்பொழுதைப் போல் பார்த்ததும் வேலையாட்கள் வாராதபடி கதவுகளைத் தாளிட்டு விட்டு வீட்டிலுள்ள செருப்புகளை யெல்லாம் எடுத்து வந்தேன். ஒவ்வொரு காலடியும் செருப்புக்களுக்குச் சரியாகவே இருந்தது"

"அதனல்................?"

"எல்லோரும் கொலை நடந்தபோது இங்கிருந்திருக்கிருர்கள் என்பது விளங்கவில்லையா? இப்பொழுதாவது கொலை நடந்த விபரம் தெரிகிறதா?"

"இல்லை."

"தேவதாஸ் கழுத்தில் துணியைச் சுற்றி ஒரு நுனியை மரத்தில் கட்டினர்கள். பின் எல்லோரும் மற்ருெரு நுனியைப் பிடித்து அவன் சாகும்வரை இழுத்திருக்கிருர்கள். சமையற்காரன் காலடியைப் பார்த்தாயா? அவன் கடைசியில் இருந்திருக்கிருன். முதலில் காரியஸ்தன் பின் வேலையாட்கள். இதை யெல்லாம் கண்டு பிடித்த பிறகு வேலையாட்களைத் திறந்து விட்டு அங்கு வந்து சேர்ந்தேன்."

"பின் தான் பாடியதோ?"

"ஆம். இதை பறித்த பிறகு எனக்கு ஒரு பெரும் பாரம் நீங்கியது போலாகி விட்டது."

"கோவிந்தா! இன்னும் ஒரு சங்கடம் தானிருக்கிறது."

"என்ன?"

"இவர்களை எப்படி ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்வது? என்னிடம் இரண்டு விலங்குகள் தானிருக்கின்றன"

"ஒரு பெரிய மோட்டாருக்குச் சொல்லி விடு" என்ருர் துப்பறியும் நிபுணர்.

5

பன்னிரண்டு கைதிகளின் விசாரணையும் ஒரே மாதிரியான தண்டனையும் ஊரையே அல்லோல கல்லோலப் படுத்தி விட்டது. அவர்கள் வாழ்க்கையைப் பற்றியும் அப்பொழுது செய்திருக்கும் செய்திருக்கும் அட்டூழியத்தைப் பற்றியும் கூறுத பத்திரிகைகள் மதிப்பற்றனவாகி விட்டன. கெட்ட குணமுள்ள கிழவன் சாவுக்காக இவர்களனைவரும் தூக்குத் தண்டனை விதிக்கப் பட்டனர்.

ஜனங்க ளிடையே அமைதி நிலை பெற்ற பிறகு கோவிந்தன் 'தேவவிலாஸ்'த் திற்குச் சென்ருர். புத்தக சாலையைப் பார்வையிட்டார். பிறகு கிழவரின் மேஜையைத் திறந்து அதி லுள்ள காகிதக் கத்தையை எடுத்துப் புரட்டிப் பார்த்தார். தேவதாஸ் உயில் அகப்பட்டது. முதல் பக்கத்தில் பின்வருமாறு தேவதாஸ் கைப்பட எழுதியிருந்தது.

"நான் ஊரிலேயே மிகவும் கெட்டவன். எனக்கு இவ்வுலக வாழ்வில் சற்றும் விருப்ப மில்லை. தோட்டத்தில் கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டு இறக்கப் போகிறேன். இதை ஒரு கொலையாக கோவிந்தன் நிரூபித்தால் அவர் ஐம்பதாவது வெற்றிக்கு என் ஆஸ்தி முழுமையும் அளிக்கிறேன்."

அரசியல் கொடிபூத்த சுதந்தர
மண மலர்கள்.

லாயிட் ஜியார்ஜ்ஜும் அவரது கட்சித் தோழர்களும்

மகாத்மா காந்தி (இந்தியா)

ஹாமிஜ் கிப்ஸன் (அமெரிக்கா)

ஜியார்ஜ் பெர்னர்டுஷா
(இங்கிலாந்து)

ஹெர் ஹிட்லர் (ஜெர்மனி)

கனம் ஆகாகான் (இந்தியா)

மிஸ்டர் லவால் (பிரான்ஸ்)



டிவேலரா (ஐயர்லாந்து)



"ஹரிஜன் தாதா"

—(o)—

(பெ. இராமாநுஜன்.)

பாரிஸ்டர் விஸ்வநாத ஐயர் மதுரையில் பிரபல வக்கீல். வக்கீல் தொழிலில் அவர் பிரபலமாக விளங்குவதைப் போல் பதினைந்து வருஷங்களாகப் பொது நல சேவையில்—அதிலும் ஹரிஜனத் தொண்டில் கீர்த்தி பெற்று விளங்குகிறார். தமிழ் நாட்டின் எந்த மூலை முடுக்குகளில் ஹரிஜனப் பிரசாரம் நடப்பினும் அங்கு நமது ஐயரின் திருநாமம் முன்னணியில் நிற்கும்! செளகரியப்படும் இடங்களுக்கு நேரே சென்று அதில் கலந்து கொள்வார். மற்ற இடங்களுக்குப் பணமும் ஆசிக்கடிதமும் அனுப்பிடுவார். வைக்கம், குருவாயூர் சத்தியாக்கிரகங்களிலும், மகாத்மாஜீயின் ஹரிஜன யாத்திரையிலும் நமது ஐயர் அளவு கடந்த ஊக்கமும் உற்சாகமும் காட்டினார். மகாத்மாவின் ஹரிஜன யாத்திரையை அடுத்தாற்போல் ஸ்ரீசங்கராசாரிய சுவாமிகள் நமது தமிழ்நாட்டில் "திக்விஜயம்" செய்ததை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். சுவாமிகள் மதுரையில் எழுந்தருளியிருந்த பொழுது ஐயர் ஆயிரக் கணக்கான பொருளைப் பாதகாணிக்கையாக சுவாமிகளுக்குச் சமர்ப்பித்திருக்கிறார். இதனால் அப்பொழுது ஐயாவர்கள் மீது தவறான அபிப்பிராயம் பொது ஜனங்களிடைப் பரவியிருந்தது. நல்ல வேளையாக சுவாமிகள் மதுரையிலிருந்து திருச்சிக்குப் புறப்பட்ட மறுநாளே "திலகர் கட்டத்தில்" (கிருஷ்ண ராயர் தெப்பகுளத்தில்) ஒரு பொதுக் கூட்டம் கூட்டுவித்து, அதில் ஐயாவர்கள் மனதைத் திறந்து பேசி தனது களங்கமற்ற தன்மையை ருஜுப்பித்து விட்டார். அவர் அன்று பேசியவற்றின் சாரம்—எனது பிரிய நேயர்களே! இந்த ஒரு வார காலமாக நண்பர்கள் சிலர் என்னிடம் திடுக்கிடும் படியான செய்தியை அடுத்தடுத்து கூறி வந்தனர். நான் அதைப் பற்றிக் கவலையோ திகைப்போ அடையவில்லை. ஏனென்றால் நான் செய்தது தவறல்ல. ஆனால் சிலர் அதைத் தவறாக நினைத்திருப்பதாய்த் தெரிகிறது. "லோககுரு" சங்காராசார்ய சுவாமிகளுக்கு நான் எப்படி காணிக்கை செலுத்தலாம்? என்பது தான் அது. மகாத்மாஜியின் ஹரிஜனப் பிரசாரத்துக்கு எதிர்ப் பிரசாரம் புரிந்து வரும் சுவாமிகளுக்கு நான் பொருளுதவி செய்வது கூடாது தான். நான் அந்த வகையில் பொருள் உதவி செய்யவில்லை. எங்களுக்கு "ஞானகுரு" என்ற வகையில் காணிக்கை செலுத்தினேன். அது என் கடமை. தன் கடமையைச் சரியாக செய்யாதவன் பிறர் கடமை மட்டும் அறிந்து எப்படி நடக்கப் போகிறான்? ஆகையால் எனக்கு மகாத்மாவிடத்தில் ஏற்பட்டுள்ள பக்தி விஸ்வாசத்திலோ, ஹரிஜனப் பிரசாரத்திலுள்ள உற்சாகத்திலோ குறைந்து விட்டதாக யாரும் எண்ண வேண்டாம்." காந்திக்கு ஜே!" "விஸ்வநாதையர்க்கு ஜே!" என்ற ஆரவாரத்துடன் கூட்டம் கலைந்தது. இவ்வித தூய உள்ளமும் தரும சிந்தையும் வாய்ந்த ஐயாவர்கள் திருப்-

பெயர் பத்திரிகைகளில் பிரபலமாக வெளி வரவில்லையே என்று அன்பர்கள் பலர் ஐயுறலாம். நமது ஐயர் விளம்பரப் பிரியர் அல்லர். கூட்டத்தில் பேசும்பொழுது அவர் விடுக்கும் முதல் விண்ணப்பம் பத்திரிகா நிருபர்களுக்குத் தான். தான் அமைதியையும் செயலையும் விரும்புகிறவனன்றி ஆரவாரமும் பிறர் மெச்சலும் விரும்பாதவனுதலின் தன்னைப் பற்றி நிருபர்கள் எழுதுவதா யிருந்தால் தன்னிடத்திலுள்ள சிறுமையையே எழுத வேண்டுமென விண்ணப்பிப்பார்! அதற்காக அந்த "அப்பாவி" நிருபர்கள் ஒன்றுமே எழுதுவதில்லை!

* * *

வண்டியூர்த் தெப்பக்குள ரோட்டின் அருகே ஐயரின் பங்களா ரமணியமான சோலையின் மத்தியில் அமைந்திருக்கிறது. ஒருநாள் ஐயரின் ஸஹதர்மணி வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கையில் அவருடைய இரண்டு வயதுக் குழந்தை யொன்று தவழ்ந்து தவழ்ந்து ரோட்டிற்கு வந்து விட்டது. இயந்திரத்தில் பழுது ஏற்பட்டு ஓட்டுபவரின் கைக்கு அடங்காமல் மோட்டார்கார் ஒன்று ஓடிவந்து கொண்டிருந்தது. குழந்தையைக் கண்டதும் காரை நிறுத்த டிரைவர் எவ்வளவோ முயன்று பார்த்தார். முடிய வில்லை. அணுகி விட்டது. இன்னும் இரண்டு கஜ தூரந்தான். வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த ஐயர் பதை பதைத்து ஓடிவந்தார். நல்ல வேளை! அவ் வழியே வந்து கொண்டிருந்த ஒருவன் பருந்து போல ஒரே பாய்ச்சலாக பாய்ந்து குழந்தையைத் தப்புவித்தான்! ஐயர் கண்களில் ஆனந்த பாஷ்பம் வழிந்தது.

"அப்பா! நீ தான் இன்று அழிந்து போக விருந்த எனது வம்சத்தை நிலை பெறச் செய்தாய்! உனது உபகாரத்திற்கு நான் என்ன பிரதியுபகாரம் செய்யக் கூடும்? இன்று ஒருநாள் மட்டுமாவது என்னுடைய விருந்தினனாக இருந்து போக வேண்டும்" என்று புகழ்ந்தார்.

"சாமி! நான் பறையன். ஒண்ணும் வேணுமின்னு செய்யலிங்க. குழந்தை ரோட்டு நடுவில் இருந்திச்சு. மோட்டார் வண்டி தலை கால் தெரியாமே ஓடி வந்து. உடனே குழந்தையைக் காப்பாத்தனு மின்னு மனசிலே பட்டிச்சு. அப்படியே செஞ்சேன். வேறே ஒண்ணும் ஒசத்தியா செய்து விடலிங்க" என்றான் வழிப்போக்கன்.

"நீ பறையனு? நான் செய்த புண்ணியம் பலன் தந்தது! கட்டாயம் எனது விருந்தினனாக இன்று இருந்தே போக வேண்டும். நீயும் உன் இனத்தாரும் உலகிற்கு உபகாரம் செய்யப் பிறந்திருக்கிறீர்கள்! நாங்களோ உபகாரம் செய்யாமல் இருப்பதோடு அபகாரம் வேறே செய்து வருகின்றோம். இந்த நிலைமை மாற வேண்டும் என்றே நான் ஓயாமல் உழைத்து வருகிறேன். இனிமேல் நீ பறையனென்று உன்னைச் சொல்லிக் கொள்ளாதே. ஹரிஜன் என்று தெரிவி."

சாமி! உங்க வாக்கியம் எங்க பாக்கியம். நீங்க எறிந்த எச்சு இலையைப் பொறுக்கித் தின்னு வயிறு வளக்கிறவங்க நாங்கள். எங்களுக்கு ஒருத்தரும் ஒண்ணும் சும்மா கொடுக்க வேணும். நல்ல வேலை கொடுத்து வயறு நிறைய சோறு போட்டால் போதும். என் பெண்சாதி பிள்ளையைத் தனியே விட்டு விட்டு மேலூருக்குப் போய் ஒரு மாசமாவுதுங்க. இப்போ என் பெண்சாதி கருப்பாயிருக்கு உடம்பு சுகமில்லை யென்னு சேதிகேட்டு அவசாமாப் போறனுங்க. கும்பிடுகிறேன்" என்று வணங்கிப் போய் விட்டான்—வீரன் சாம்பான்.

ஐயர் மனதில் கோடானு கோடி எண்ணங்கள் உதித்தன. தன்னுடைய இரண்டு வயது ஆண் குழந்தை தப்பியதை அவர் நினைக்க வில்லை. வீரனுடைய உயர்ந்த மனே பாவத்தை யெண்ணி யெண்ணி மனம் உருகினர். "பறையர்கள் எல்லாரும் தாழ்ந்தவர்கள்; மற்றவர்கள் எல்லாரும் உயர்ந்தவர்கள் என்று எதற்காக முன்னேர்கள் ஜாதி பேதம்

வகுத்தார்கள். இந்த ஜாதிகள் எல்லாம் நாசமாய்ப் போகணும். ஜாதியில் என்ன பெருமை சிறுமை இருக்கிறது? வீரன் சாம்பானின் உத்தம சிந்தை மேல் ஜாதிக் காரர்களில் எத்தனை பேருக்கு உண்டு?" என்று இவ்வாறு நினைந்துருகிய வண்ணம் வீட்டிற்குள் நுழைந்தார்.

அன்றிரவு ஐயருக்கு நல்ல தூக்க மில்லை. தாழ்ந்த வகுப்பாரின் பரோபகார செயல்களையும், மேல் வகுப்பாரின் குறுகிய பிடிவாதச் செயல்களையும் எண்ணி யெண்ணிப் பெருமூச்சு விட்டார். மகாத் மாஜியின் ஹரிஜனப் பிரசாரம் ஐயருக்கு ஆமை நடையாகத் தோன்றிற்று. அந்த முறையையே பின் பற்றினால் இந்த நூற்றாண்டில் ஹரிஜனங்களுக்கு விமோசனம் ஏற்பட வழியில்லை யென்று நினைத்ததும் மனம் பதறினர். விடிந்தெழுந்ததும் "ஹரிஜன சேவாசங்கத்"திற்கு 20,000 ரூபா யனுப்பி, அவர்களை முன்னேற்றும் வழிகளை இன்னும் அதி தீவிரமாகப் பின் பற்ற வேண்டுமென ஒரு கடிதமும் எழுதிவிட்டு தான் வேறு வேலை கவனிப்ப தென்று தீர்மானித்த வண்ணம் அயர்ந்து உறங்கினர்.

* * *

மாலை 4-மணி. கனம் விஸ்வநாத ஐயர் தமது பங்களாவின் முன்னால் சோபாவில் சாய்ந்த வண்ணம் "ஹிந்து" பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந் தார். "நான் கூப்பிடறது காதில் விழ லையா? பேப்பரில் என்ன அவ்வளவு ஸ்வாரஸ்யமான சங்கதி? டிபன்கூட வேண் டாம் போலிருக்கே!" என்று சமையலறையிலிருந்து கூப்பிட்ட வண்ணமே வெளியில் வந்தாள் ஐயாவர்களின் தர்மபத்தினி. "என்னடி, அதிகாரம் பண்ணுகிறாய்? ஒரு நாளைக்கு டிபன் இல்லாவிட்டால் செத்துப் போவோமா? நமது நாட்டில் உண்ண உணவும், உடுக்கத் துணியும், இருக்க இடமுமில்லாமல் அவதிப்படும் ஏழை ஹரிஜனங்களின் துயரைப் பரிகரிக்க இதுவரை யாராவது தீவிர முயற்சியெடுத்துக் கொண்டிருக்கிறார்களா? டிபனும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்' என்று ஆவேசத்தோடு கூறினர் ஐயர். அப்புறம் ஐயர் மாலைச் சிற்றுண்டியை மறந்து விடவில்லை. அம்மையாரின் சாகசப் பேச்சால் சில நிமிஷத்திற்குப் பின்பு "ஹிந்து" பத்திரிகையைக் கையில் சுருட்டிப் பிடித்த வண்ணம் சமையலறைக்குள் சென்றார். பத்திரிகையில் உள்ள அந்த ஸ்வாரஸ்மான விஷயத்தைத் தனது மனைவியார்க்குத் தெரிவிக்காமல் ஐயர் இருந்தாலும், நேயர்களுக்குத் தெரிவிக்காமல் இருக்க எனக்கு இஷ்டமில்லை. அந்த விஷயத்தின் சாரம் இதுதான்.

"ஹரிஜனங்கள் தாதா".

ஹரிஜனங்களின் முன்னேற்றத்தையே தனது வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டிருக்கும் மதுரை விஸ்வநாத ஐயாவர்கள் ஹரிஜன சேவாசங்கத்திற்கு ரூபா இருபதினாயிரம் உபகரித்திருக்கிறார்கள். ஐயாவர்கள் நீடூழி வாழ்க!"

* * *

வைகையாற்றுக்கு வடக்கே சதுப்பு நிலங்களுக்கு மத்தியில் வைக்கோலாலும், பனையோலையாலும் வேயப்பட்ட பத்துப் பதினைந்து குடிசைகள். அவற்றுள் காற்றால் பிரிந்து இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சிதறிக் கிடக்கும் பனையோலைகளைத் திருப்பி வேய்வதற்கில்லாமல் சிதலமான ஒரு குடிசை. அதனுள் உடைந்து மூளியான நான்கைந்து வெறு மட்கலயங்கள், அழுக்கடைந்த ஒரு கோரைப்பாய், கந்தலான துணிகள்! இங்ஙனம் வறுமையின் சின்னமாக விளங்கும் அந்தக் குடிசையில் நோயால் மெலிந்த உடலும் குழிந்த கண்களும் உடைய ஒருத்தி பாயின்மேல் தன்னறிவிழந்து படுத்திருக்கின்றாள். அவளுடைய ஜீவநாடி அளவுக்கு மிஞ்சி துடித்துக்கொண்டும், சுவாசம் மிகப் பிரயாசையோடு வந்துகொண்டும் இருந்தது. மரணம் இப்பொழுதோ, இன்னும் சில நிமிஷத்திலோ என்று சொல்வதற்கில்லை. அவளுக்கு அருகில் ஒருவன் மனம் அழிந்து செயலற்று, இன்னது செய்வதென்று அறியாது துயரப் பெருக்கோடு வீற்றிருக்

கின்றான். அவர்கள் பக்கத்திலே பத்து வயதுச் சிறுவன் ஒருவன் தேம்பித்தேம்பி அழுதுகொண்டிருந்தான். இவ்வளவு துயரப் பெருக்கில் முழுகித் தத்தளிக்கும் இக்குடும்பம் யாருடையது? அன்றொரு நாள் விஸ்வநாத ஐயரின் அருமை மகவை மோட்டார் யமனிடத்தினின்றும் தப்புவித்த வீரன் சாம்பானுடையது. அவன் மனைவி கருப்பாயி நான்கு மாதங்களுக்கு மேலாக நோயால் மெலிந்து பாயும் படுக்கையுமாக இருக்கின்றாள். நல்ல மருந்தில்லை; மற்ற வசதிகளும் இல்லை; பசிக் கொடுமையை ஆற்ற உணவும் கிடையாது. தன் மனைவியின் உடல் நிலை இன்று குணமாகிவிடும், நாளை குணமாகிவிடும் என எதிர்பார்த்து வந்தான். ஆனால் அவள் உடல் நிலையோ நாளுக்கு நாள் மோசமாகி வந்தது. பாவம்? வீரன் நம்பிக்கை இழந்தான்! ஒருவாரமாக பண்ணை வேலைக்குப் போகவில்லை. வீட்டிலிருந்த தானியமும் தீர்ந்துவிட்டது. பலவித கொடிய துயரப் பெருக்கால் நலிவுறும் அவர்களைப் பசிப் பிணியும் சேர்ந்து வருத்தத் தொடங்கியது. கவலை மிகுதியால் மனம் மெலிந்து பலஹீனனான வீரனால் வெளியே சென்று உணவு கொண்டுவர முடியவில்லை. தனது பண்ணை யெஜமான் சாமியா பிள்ளையிடத்தில் சென்று கொஞ்சம் அரிசிக் குறுணை வாங்கிவரும்படி தனது மகன் முத்தனை காலையில் அனுப்பினான்.

"அரிசிக் குறுணையா வாங்கிவரச் சொன்னான்? அவ்வளவு பெரியவனாகிவிட்டான்? கம்பு, வரகு பிடிக்குமா? ஆறு மாதமாக தன் பெண்சாதியை தோட்ட வேலைக்கு வாராமல் நிறுத்திக் கொண்டதோடு, இந்தப் பயலும் (வீரன்) பத்து நாளாக வேலைக்கு வாராமல் இருந்து கொண்டு அரிசி வாங்கிவரும்படி உன்னை அனுப்பிவிட்டானா? அதெல்லாம் ஒன்றும் கொடுக்கமுடியாது, ஓடிப்போ" என்றார் எஜமான்.

"சாமி! வீட்டிலே ரெண்டுபேருக்கும் சுகமில்லிங்க, காப்பாத்தணும்" என்று கெஞ்சினான் முத்தன்.

"பேசாமல் போகிறாயா? உதை வேணுமா?" என்று கர்ஜித்தார் பிள்ளைவாள். பாவம், சிறுவன் ஒன்றும் பேசாது சென்று தன்னறி விழந்துகிடக்கும் தாய்தந்தையர் மத்தியில் நின்றுகொண்டு வாய்விட்டுக் கதறினான். வீரனுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. ஒரு சிறு ஊழியமாவது செய்யாமல் ஒருவரிடம் ஒன்றை பெற வீரன் இதுவரை முயன்றதே கிடையாது. அன்று விஸ்வநாத ஐயரின் மகவுக்கு நேர இருந்த விபத்தை விலக்கியது ஊழியம் என்று அவன் எண்ணவில்லை; கடமையென்று கொண்டான். அதனால் ஐயரிடத்து மகனையனுப்ப முதலில் அவன் மனம் இசையவில்லை. தன் மனைவி இனி பிழைக்கமாட்டாள் என்றும், தானும் இன்னும் சில நாட்களில் மரணத்துக்கு இரையாகலாம் என்றும், பின்பு அநாதாவாய் நிற்கும் தன் இளஞ்சிறுவனின் கதியாதாகுமென்றும் பற்பலவாறு சிந்தித்துக் கண்ணீர் வடித்தான். "தம்பி, முத்தா! அழாதே! வண்டூர் தெப்பக் குளத்திற்கு மேற்கே இருக்கிற ஐயர் பங்களாவுக்குப் போய், என் பேரைச் சொல்லி பசிக்கு ஏதாவது கேட்டு வாங்கிச் சாப்பிட்டு வா. ஐயரு வேணுமென்கிறதைக் கொடுப்பார், போ" என்று விஸ்வநாத ஐயர் பங்களா இருக்கிற இடத்தை விவரமாகச் சொல்லியனுப்பினான்.

* * *

அன்று விஸ்வநாதையரின் தாயாருக்கு வருஷாப்திகம். உச்சிக் குடுமியும், பஞ்சகச்ச வேஷ்டியும், பளபளப்பான வயிறும் உடைய சாஸ்திரிகள், ஐயர்கள், இன்னும் ஏராளமான அதிதிகளால் ஐயரின் வீடு ஆர்ப்பாட்டத்தோடு விளங்குகிறது. சாப்பாடு முடிந்து அனைவரும் பங்களாவின் முன் புறத்துள்ள தாழ்வாரத்தில் அமர்ந்து வெற்றிலை பாக்கு மென்று கொண்டு, "லோக சம்ரக்ஷணார்த்த" வியவகாரத்தில் ஈடுபட்டிருந்தனர்.

"சாமி! பசி வயிற்றைக் கிள்ளுது; கொஞ்சம் சோறு போடுங்க"

"யாரடா அவன்? சோறு கீறு ஒண்ணும் இன்னக்கி சூத்ராளுக்குப் போடக்

கூடாது! போடா வெளியே" என்ற சாஸ்திரிகள் பலரின் ஒருமுகமான குரல் "கனீர்" என ஒலித்தது.

"சாமி, நான் வீரன் சாம்பான் மவ னுங்க; பசிக்குக் கொஞ்சம் போடுங்க"

"யாரு, சாம்பான் மகனு? ஐயை யோ! இதென்ன பூஜைவேளையில் காடி நுழைந்தமாதிரி சுபதினத்தில் பறத்தீட்டு! இந்தப் பயலோடு இன்றைக்குப் பேசு வதுகூட தோஷமாச்சே" என்ற முழக்கத் தோடு கையிலிருந்த "குண்டாந் தடிகளை" ஓங்கி வெளியே ஓடிப்போகும்படி விரட்டி னர். "நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்துப் போஷித்தாலும் அது தன் கேவல குணத்தை விடாது" என்றபடி தாழ்ந்த ஜாதிப் பயல்களுக்குப் பாவம் பாவம் என்று இரங்கினால் அவர்களுக்கு சமயா சமயங்கள் தெரிவதில்லை. இன்று பெரியவர்களுக் கெல்லாம் பலகார விருந்து நடப்பதால் தன்னையும் நடுவீட்டில்வைத்து உபசரிப்பேன் என்று அந்த ஈனப் பயல் நினைத்து தன் மகனை யனுப்பி யிருக்கிறான்! உதைத்து விரட்டுங்கள் வெளியே" என்று கர்ஜித்தார் "ஹரிஜன தாதா"வான விஸ்வ நாத ஐயர். சிறுவன் பயந்து வெளியே ஓடினான். அங்கே குவிந்துகிடந்த எச் சில் இலைகளில் உள்ளவற்றை நாய்கள் பல ஒன்றோடொன்று உறுமி உலைத்து உண்டு கொண்டிருந்தன. கண்டான் சிறுவன். கீழே கிடந்த சிறு கல் ஒன்றை யெடுத்து அவற்றின்மேல் எறிந்து துரத்தினான். அவைகள் எல்லாம் "வள் வள்" என்று அவன்மீது பாயத்தொடங்கின. சாஸ் திரிகளின் மிரட்டலுக்கு அஞ்சிய அவன் நாய்களின் மிரட்டலைப் பொருட்படுத்த வில்லை. தானும் அவைகளோடு ஒன்றாகச் சேர்ந்து எச்சிலைப் பொறுக்கித் தின்றான். தற்செயலாக வெளியில்வந்த ஒரு சாஸ்திரி கள் இதைப் பார்த்துவிட்டார்.

"பறப்பயல் நமது சேஷத்தைத் தொட்டுவிட்டானே! ஸ்ரார்த்த பலனே போய்விட்டதே" என்று பதைபதைத்து கையிலிருந்த குறுந்தடியைச் சுழட்டி யெறிந்தார். ஐயோ! அச் சிறுவனின் ஒட்டிய வயிற்றில் பலமாக விழுந்தது! "அப்பா! செத்தேன்!" என்று துடி துடித்து விழ்ந்தான் இளஞ்சிறுவன்!

பாரததேவி! "பஞ்சமும் நோயும் நின் மெய்ப் புதல்வர்க்கோ!"

ஆக்ட் புத்தகங்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
இந்தியன் பினல் கோட் சட்டம்	3	0	பாரம்பரை கிராமஉத்தி யோகஸ்தர்கள் சட்டம்	1	0	ஸ்டாம்பு ஆக்ட்	0	12
கிரிமினல் லா	3	0	இன்கம் டாக்ஸ் சட்டம்	1	0	ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்	0	10
சிவில் லா	3	0	லோகல்போர்ட் ஆக்ட்	2	0	டிரஸ்டிகள் சட்டம்	0	12
விவகார சிந்தாமணி	2	8	பஞ்சாயத்துச் சட்டம்	1	4	கால நிர்ணயச் சட்டம்	0	8
பெரிய ஹிந்து லா	2	0	இந்துதேச சாட்சிஆக்ட்	1	0	நில ஆக்கிரமிப்பு என்குரோச்மென்ட் சட்டம்	0	4
முகம்மதியன் லா	2	0	தேவஸ்தான சட்டம்	1	0	கிராமச் சுகாதாரம்	0	2
கிராம முன்சிப் சட்டம்	1	8	எஸ்டேட் லாண்டு ஆக்ட்	1	4			

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

("இரஸிகன்.")

"நமது இந்து மத புராண இதிகாசங்களில் இயற்கைக்கு மாறுனதும், அறிவுக்குப் பொருத்த மற்றதும், சிறிதும் நம்புவதற்கு ஏதுவற்றதுமான பல ஆபாசக் கதைகள் நிறைந்திருக்கின்றன" எனப் பகுத்தறிவு வாதிகள் கூறி வரும் கூற்றுக்களில் ஒரு வகையில் உண்மை யிருக்கிற தென்பதை, சமீபத்தில் சென்னையில் காட்டப் பட்ட "தாரா-ச-சாங்கம்" தமிழ்ப் பேச்சுப் படத்தைக் காண நேர்ந்த போது நான் அறிந்தேன். புராண, இதிகாசக் கதைகள் ஒவ்வொன்றிற்கும் சாஸ்திரிகள் தத்துவார்த்தங்கள் கூறினும், தாரா-ச-சாங்கம்" போன்ற ஆபாசக் கதைகளில் சாஸ்திர நுட்பங்கள் இருக்கின்றன வென்றே, உயரிய உண்மைகள் பொதிந்திருக்கின்றன வென்றே என் போன்றவர்கள் சிறிதும் ஒப்புக்கொள்ள முடியாது. இவ்வித ஆபாசக் கதைகள் மக்கள் படிப்பதற்கோ, அவர்களிடையே கூறப் படுவதற்கோ அருகதையற்றவை யென்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

'பார்வதி கல்யாணம்' தமிழ்ப் படத்தில் நடிக்கும் மிஸ். தனலக்ஷிமி.

"தாரா-ச-சாங்கம்," "சாங்கதாரா" போன்ற கதைகளை, அவற்றிற்குக் கொடுக்கப் பட்டிருக்கும் தேவசம்பந்தம், தலைவிதி ஆகிய வர்ணப் பூச்சுகளையெல்லாம் நீக்கிப் பார்த்தால், தற்காலம் ஆடவர்களின் ஆணவத்தாலும், அறியாமையாலும் சுடநலங் காரணமாக இயற்கைக்குமாறுன முறையில் நடத்தப்படும் சில காரியங்களின் விளைவாக ஏற்படும் சமூக ஊழல்களே அக் காலத்திலும் நடைபெற்று வந்தன என்பதை ஒருவாறு அறியலாம். "தாரா-ச-சாங்கம்" கதையில், பிரகஸ்பதி

என்னும் ரிஷி தமது முதிய வயதிற்குச் சிறிதும் பொருத்தமற்ற தாரை என்னும் ஒரு இளம் பெண்ணை விவாகஞ் செய்து கொண்டு வாழ முயல்வதும், தாரை தனது இளம் பருவ இச்சையைப் பூர்த்தி செய்வதற்குத் தன் கிழ புருஷர் சிறிதும் தகுதியற்றவ ரென அநுபவத்தில் அறிந்து வாழ்க்கையில் இன்பமில்லாது மனம் புழுங்குவதும், இச் சமயத்தில் பிரகஸ்பதி யிடம் வாசித்து வந்த சந்திரன் என்னும் வாலிபனைக் கண்டு காதல் கொண்டு கணவனில்லா சமயம் பார்த்து அவனைத் தன் வசப்படுத்தி அவனோடு கூடி மகிழ்வதும், இவர்களது களவொழுக்கத்தை நேரிலேயே கண்டு விட்ட பிரகஸ்பதி தன் மனைவியைக் கண்டித்து சந்திரனை வெளியே துரத்துவதும், தாரை பின்னரும் சந்திரனையே பின் தொடர்ந்து சென்று அவனோடு சேர்ந்து இன்புறுவதும், எனவே பிரகஸ்பதி வாழ்க்கையில் ஏமாற்ற மடைந்து வெறுப்புணர்ச்சியோடு மன முடைவதுமே சாரமாகும்.

இதை விட்டு, உலக மக்களின் நன்மைகருதி ஏற்கனவேயுள்ள அஷ்டகிரஹங்களோடுமற்றொரு கிரஹத்தையும் உற்பத்தி செய்யவேண்டு மென்பதற்காக, பிரமதேவரின் கட்டளைப்படி இந்திரன், பிரகஸ்பதியை வஞ்சகமாக தேவலோகத்துக்கு அழைத்துக்கொண்டு அவரது மனைவி தாரைக்கும், சிஷ்யன் சந்திரனுக்கும் காமத்தை யுண்டாக்கிக் கூடச்செய்வதும் அவர்கள் வாயிலாகப் புதன் என்னுங் கிரஹம் பிறப்பதும், தன் மனைவி சந்திரனோடு கூடி இன்புற்றிருப்பதை நேரில் கண்ட பிறகும்,—அவள் இவரை வெறுத்து விட்டு கள்ளக் காதலனோடு ஓடிய பிறகும்—அவர் அவளைத் தன்னுடன் வாழ அழைப்பதும், அவளை இவ்விதத் தீயொழுக்கத்தை மேற்கொள்ளலாமா என்று பிரகஸ்பதி கேட்கையில், அவள், 'நீர் சந்திரனை என் ஆசைக்கு மாரனாகப் பாவிக்கும்படி கூறிய வண்ணமே தாம் நடந்து கொண்டதாக'க் கூறி வாதிப்பதும் பிரம்மதேவர் தாரையையும், சந்திரனையும் நோக்கி அவர்களது கூடா வொழுக்கத்தை ஆசிர்வதித்து, உலக க்ஷேமத்தின் பொருட்டே இவர்களது சேர்க்கை ஏற்பட்டதால், அதில் தவறொன்று மில்லையென்றும், தாரை கற்பிற் சிறந்தவளே யென்றும் கூறுவதும் எவ்வளவு ஆபாசமென்று சாதாரண அறிவுடையவரும் கூறுவர்.

இவ்வாபாசப் புராணக் கதையை உண்மை யென நம்பி, 'தேவர்களே வழி காட்டி யிருக்கும்போது நாம் ஏன் அவ்வாறு நடக்கக்கூடாது?' என்று எண்ணி மக்கள் பின்பற்றி நடக்க ஆரம்பித்தார்களானால், என்ன விபரீதம் விளையும்? இதைச் சிந்தித்துப் பார்த்தாலே உடல் நடுங்குகிறது.

கண்ணகி, சதாரம் போன்ற கற்பரசிகள் கதைகளையே சித்திரவதைப்படுத்தி ரசாபாசப்படுத்தும் நமது நாடகசபைப் பிரகஸ்பதிகள், தாரா சசாங்கம் போன்ற காமவெறி பிடித்த கதைகள், அகப்பட்டால் சும்மாவா விடுவார்கள்? நாடக மேடைகளில் தாரா சசாங்கம், டம்பாசாரி முதலிய நாடகங்களை நடிப்பவர்கள் மிக ஆபாசமாக நடித்துக்காட்டி வந்தனரென்றும், தகுதி வாய்ந்தவர்கள் இந்நாடகத்தைக் காண கண்கூசின ரென்றும் கூறப்படுகிறது. நாடகமேடை சங்கீத கேசரிகளும், அரசர்களும், அரசிகளும், கோகிலங்களும் சினிமா உலகில் குடியேறி வரும் இக்காலத்தில், இவ்விதக் கதையும் மெல்ல வந்து புகுந்து விட்டதில் ஆச்சரியமில்லை. நாடக மேடையோடு இவ்வாசாபக் கதை நின்றுவிட்டால், தமிழ் நாட்டுக்கு அவ்வளவு கௌரவ மில்லை யென்று எண்ணி, சினிமா உலகிலும் இதைத் துணிவாக அரங்கேற்றிய புண்ணிய மூர்த்திகள் மதுரை முருகன் டாக்கீஸ் பிலிம்கம்பெனி சொந்தக்காரர்களாவர். அவர்களுக்கே இத் தனிப் பெருமையுரிய தாகும். அவர்கள் என்ன நோக்கத்தோடு இப் படத்தைத் தயாரித்தார்க ளென்பது கடவுளுக்கே வெளிச்சம்.

ஏற்கனவே, சினிமாவுக்குத் தகுந்த கதைகளைப் பொறுக்கி யெடுக்காது, அதற்குச் சிறிதும் பொருத்த மில்லாத புராண

இதிகாசக் கதைகளையும், சில சமூக சம்பந்தமான கதைகளையும் படமாகத் தயாரித்து வெளியிட்டு, அக் கலைக்கே களங்கத்தை யுண்டு பண்ணி வருகிறார்க ளென்னும் பெயர் தமிழ் நாட்டுப் பட முதலாளிகளுக்கு இருக்கையில், தாரா-ச-சாங்கம் போன்ற ஆபாசக் கதைகளையும் படமெடுத்து வந்தால், இன்னும் பிறநாட்டார் வந்தால் தானா சிருங்கார நாடகம் என்று கூற முடியும்? இவ்விதம் ஆபாசமாகச் சித்தரித்துக் காட்டப்படும் படத்தை அறிஞர்களும், குடும்பப் பெண்மணிகளும், சிறுவர் சிறுமிகளும் எவ்வாறு பார்க்க முடியும்? பொது மக்களை இது தவறான வழியில் இழுத்துச் செல்வதாக வல்லவோ ஆகும்? ஆகவே, இனியேனும், இவ்வித

"சீமந்தனி" தமிழ்ப் படத்தில் நடிக்கும் மிஸ். டி. பி. ராஜலக்ஷிமி.

நம்மைக் கேலி செய்வதற்கே பெரிதும் இடமாகும் என்று நான் எச்சரிக்க விரும்புகிறேன். சினிமா படத்துக்குச் சிருங்கார ரசம் அத்தியாவசிய மென்றால், அதற்கும் ஒரு அளவில்லையா? ஐந்தாம் வேதம்; ஐந்தாம் வேதம் என்று கதறி மிருக சுபாவத்தை மீசுரப் படுத்திப் பார்ப்பவர் காமவெறி கொண்டலையும் வகையில் ஆபாசமாக நடித்தும், பாடியும், பேசியும் ஆபாசக் கதைகளை எக் காரணத்தைக் கொண்டும் பட முதலாளிகள் எடுக்க முன் வரக்கூடா தென நான் அவர்களை மிகவும் தாழ்மையாகவும் வற்புறுத்தியுங் கேட்டுக் கொள்கிறேன்.

• • •

என்னுடைய துரதிர்ஷ்டம் "தாரா—சசாங்கம்" தமிழ்ப் படத்தை எவ்வகையிலோ பார்க்கும்படி நேர்ந்து விட்டது

இப் படத்தைப் பற்றி விமர்சனம் எழுத என் கை கூசுகிறது; எனினும், இப் படத்தைப் பார்த்ததன் பயனாக என் மனதினின்றும் எழுந்த கருத்தை சினிமா கலை சம்பந்தப் பட்டவர்களுக்கும், மற்றும் நண்பர்களுக்கும் தெரியப்படுத்திய பின்னர், படத் தயாரிப்பு முதலியவைகளைப் பற்றியும் இரண்டொரு வார்த்தை சொல்லாமல் இருக்க முடியவில்லை.

தாரா சசாங்கத்தின் கதைப் போக்கு தான் இப்படியென்றால், மற்ற அம்சங்களுமா குறை கூறுவதற்கு இடமாக இருக்கவேண்டும்? அவைகளாவது நன்றாக அமையப்படாதா? டைரக்டர் திறமை வாய்ந்தவராக இருந்தால், எவ்வித ஆபாசக் கதையையும் நல்ல முறையில் நாசூக்காக எடுக்கலாம். ஆனால் நம் தமிழ்ப்பட டைரக்டர்களுக்கு, மேனாட்டு, வடநாட்டு டைரக்டர்களுக்கு உள்ள சுதந்தரத்தைப்போல் பூரண சுதந்தரம் கிடையாது. தமிழ்ப் பட முதலாளிகள் டைரக்டர்களுக்குப் படமெடுக்கும் வகையில் பூரண சுதந்திரம் கொடுப்பதில்லை. அவர்கள் கூறும் யோசனைகளையும் ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை. தங்கள் விருப்பப்படியே டைரக்டர்களை ஆட்டி வைக்கின்றனர். எனவே, இப்படத்தில் நடிகர் தேர்ந்தெடுப்பு முதலிய விஷயங்களில், மிகவும் கவனமெடுத்துக் கொள்ளாததுபற்றி இப்பட டைரக்டர் திரு. எ. நாராயணன்மீது முழுக்குற்றத்தையுஞ் சுமத்துவதற்கில்லை.

இப்படத்தில் நடிக்கும் நடிகர்களில் ஸ்ரீமதி டி. வி. ராஜசுந்தரியே தாம் எடுத்துக்கொண்ட பாத்திரத்திற் கேற்றவாறு திறமையாக நடிக்கிறார். மற்றவர்கள்—சந்திரன் வேடம் பூண்ட ஸ்ரீ விஜயராவ் உட்பட—எவ்வகையிலும் குறிப்பிடத்தக்கவர்களாகக் காணப்படவில்லை. அவர்கள் எந்த அம்சத்தில் சிறந்து விளங்குகிறார்களெனக் கூர்ந்து நோக்கியும் எனக்கு ஒன்

சினிமா பிரியர்களே!

உண்மை நடிப்பும், உயர்தரக் கலையும் கண்டு களிக்க

நளாயினி

உங்களூர் வெள்ளித் திரையில் எதிர்பாருங்கள்.

டைரக்ஷன்: வசந்த ராவ், A. பெயின்டர்.

வித்வான் C. S. செல்வரத்னம் பிள்ளை, மிஸ். C. N. நீலாவதி நடித்தது.

கோலாப்பூர் சம்ரத் சினிடோன் தயாரிப்பு.

விவரங்களுக்கு:—
ஓரியன்டல் சௌண்ட் பிக்சர்ஸ் லிமிடெட், திருப்பூர்.

றும் புலப்படவில்லை. இந்திரன் முதலியவர்களாக நடித்தவர்களுக்கு வேடப்பொருத்தமே யில்லை. அத்திரி மகரிஷியாகவும், பிர

'துருவன்" தெலுங்கு படத்தில் நடிக்கும் சிறுவன் நரசிம்ம சுவாமி.

கஸ்பதியாகவும் நடித்தவர்களுக்குச் சுமாராக வேடப் பொருத்த மிருக்கிறது.

தாரையாக நடிப்பதற்கு அவரைவிட வேறொரு மங்கை இவ்வளவு பொருத்தமாக நடிக்க முடியாது எனக் கூறக்கூடியவகையில் திறமையைக் காட்டி ஸ்ரீமதி ராஜசுக தரி சமயோசிதமாக நடிப்பது பாராட்டத் தக்கது. தாரை சந்திரனைத் தன் வசப் படுத்த முயலுமிடத்தில், அவர் தம் முகத்

தில் காம உணர்ச்சியை மிகச் சாதுர்யமாக வெளிப்படுத்துகிறார். முகம் வெளிறி சுருக்கம் விழா திருந்தால் அவரது தோற்றம் இன்னும் கவர்ச்சியைத் தந்திருக்கும். அத்துடன் அவருடைய மிக மெலிந்த தேகம் சினிமாவில் முக்கிய பாத்திர மெடுத்து நடித்தற்குப் பெருந்தடை செய்யக் கூடியதாக இருக்கிறது. அவர் இனிமையாகப் பாடுவதோடு, தெளிவாகவும் பேசுகிறார்.

ஸ்ரீ விஜயராவ் சந்திரனாக வேடம் பூண்டு நடிக்கிறார். கட்டிளங்குமரியான தாரையின் மனதைக் கவர்ந்த பேரழகன் சந்திரன் வேடம் அவருக்குச் சிறிதும் பொருத்த மில்லை. அவரது குழிவிழுந்த கண்களும், ஒட்டிய தாடையும், மார் பெலும்புகள் தெரியும்படியாக மெலிந்த தேகமும் உடைய தோற்றம் பார்க்க சகிக்க வில்லை. நடிப்போ சொல்ல வேண்டியதில்லை. தாரை கட்டிப்பிடித்து காதல் மொழி பகரும்போது, இவர் ஆடுதிருடிய கள்ளன்மாதிரி விழிக்கிறாரே யொழிய, சமயோசிதமாக நடிக்கவில்லை. ஐந்தாம் வேதம் இன்னதென தெரியாதிருக்க முடியுமே யொழிய, வேதம் ஆகம புராண இதிகாசங்களை முறையாகப் படித்துணர்ந்த சந்திரன் தாரைகூறும் காமவெறி ததும்பும் வார்த்தைகளுக்குரிய பொருளைக் கூடவா தெரிந்துகொள்ளமுடியாது அசட்டுத் தனமாக விழித்திருப்பான்? என்று ஸ்ரீ விஜயராவ் நடிப்பைப் பார்க்கும் என் போன்றார்க்குச் சந்தேக முண்டாகாமலிருக்க முடியாது. ஆனால் ஸ்ரீ விஜயராவ் சுமாராகப் பாடுகிறார். அதற்காகவே அவரைப் பிடித்து சந்திரனாகப் போட்டிருக்கிறார்கள் என நினைக்கிறேன்.

அரை வார்த்தைகள் போட்டி—4

ரொக்கப் பரிசு ரூ. 2000.

முடிவு தேதி 31—6—36.

சரியான விடை சென்னை "பிரசண்ட விகடன்" ஆபீஸிலிருக்கிறது. 100 விடைக்கு மேல் அனுப்பும் யாராயினும் எழுதினால் டை ஆபீஸ் மானேஜர் எதிரிலும் தங்கள் எதிரிலும் சில் விடையை திறப்போம். தவிர முதற் பரிசு பெறும் நேயர்களுக்கு பங்கு ஏற்பட்டால் அவர்களனுப்பும் தொகைக்கு மேற்கொண்டு பரிசு அனுப்பப்படும்.

முதற் பரிசு ரூ. 1100. 2 வது பரிசு ரூ. 700

எண்ணிக்கையில் அதிகவிடை அனுப்பும் நேயர்களுக்கு ரூபா 200, 100, 50.

குறிப்பு:—1-சோலை, 2-கடவுள், 3-பிரதாபம், 4-எதிர்த்தல். 5-விபூதி, 6- 4 வாரங்கள் கொண்டது, 7-ஓர் ஈ.

படத்தில் முதல் வரியில் பூர்த்தி செய்திருப்பது போல் மற்றவைகளை குறிப்பின் உதவியால் பூர்த்தி செய்து தனிக் காகிதத்தில் எழுதி முதல் விடைக்கு அணா 8-ம் மேற்கொண்டு ரூ. 1-க்கு 3 விடைகள் வீதம் M. O. செய்த ரசீதுடன் விடை 31-6-36-க்குள் வரவேண்டும். சரியான விடையே வராவிடில் குறைந்த தவறுக்கு பரிசு தரப்படும். சகல விஷயத்திலும், மானேஜர் தீர்ப்பே முடிவானது. பரிசும் முடிவும் 3-6-36-ல் அனுப்புவோம். முடிவிற்கு கட்டாயம் விடையுடன் ¾-அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

மானேஜர், தமிழ் போட்டிப் பந்தய நிலையம் (A), திருவண்ணாமலை,

மற்றுஞ் சில்லரை நடிகர்கள் சுமாராக நடித்திருக்கின்றனர். இப்படத்தில் பாடல்கள் அதிகமா யிருக்கின்றன. இதில், ஸ்ரீமதி ராஜசுந்தரி பாடிய "வேஷ்டி கட்டிய ஆண்களை நம்பினுல் வெளியில் விட்டு வேடிக்கை பார்ப்பரே" என்ற "சேலை கட்டிய மாதரை நம்பினுல் தெருவில் நின்று தியங்கித் தவிப்பரே" என்று சந்திரன் பாடிய பாட்டுக்கு எதிர்ப்பாட்டு) பாட்டு எல்லோர் கவனங்களையும் ஈர்த்தது. சம்பாஷணை சாதாரணமாய் அமைந்திருந்தது.

"பார்வதீ கல்யாணம்" தமிழ்ப்படத்தில் ஒரு காட்சி.

ஒலிப்பதிவு அவ்வளவு சரியாக எடுக்கப்பட வில்லை. ராஜசுந்தரி பேசுகையிலும் பிரகஸ்பதி பேசுகையிலும், இரண்டொரு இடங்களில் அவர்கள் கிணற்றிலிருந்து பேசுவது போல் கேட்கிறது. ஸீன் ஜோடிப்பு, படப்பதிவு விஷயங்களில் கவனஞ் செலுத்தப் பட்டிருக்கிறது. இதுவரை சென்னை சவுண்டு ஸிட்டி ஸ்டுடியோவில் எடுக்கப்பட்ட படங்களைவிட இப்படம் மேம்பாடுடன் காணப்படுகிறது.

:: பாமா பரிணயம் ::

அல்லது

—: ஸ்யமந்தக மணி :—

மிகவும் உன்னதமான புராண தமிழ்பேசும் படம்

உங்கள் அன்பும் ஆதரவும் பெற்ற

உயர்தர நடிக ரத்தினங்கள்

மிஸ். **T. P.** ராஜலக்ஷ்மி	செருகளத்தூர்-சாமா
,, **S. P.** லெக்ஷ்மி	வித்வான்-சீனிவாஸன்
,, **S. S.** ராஜாமணி	ராஜா-**M. G.** தண்டபாணி
,, **K.** ரங்கநாயகி	காமெடியன்-**R.** நடேசைய்யர்
,, **M. A.** ராஜாமணி	

மற்றும் இதர நடிகர்கள்.

கதை, அமைப்பு டைரக்ஷன் :-

மிஸ்டர். ஒய். வி. ராவ்.

சென்னை நேஷனல் மூவிடோனில் தயாராகி வருகிறது.

தயாரில் இருக்கும் படங்கள்:-

கோவலன் - - (மிஸ். **T. P.** ராஜலக்ஷ்மி, **V. A.** செல்லப்பா)
லலிதாங்கி - - (,, ,,)
தூக்குத் தூக்கி - (**C. V. V.** பந்துலு, **K. T.** ருக்மணி)
கிருஷ்ண-அர்ஜுன- (மிஸ். பாப்பா, நாகசாமி பாகவதர்)

ராயல் டாக்கி டிஸ்டிரிபூட்டர்ஸ்,

மதுரை.